வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 14.03.2022 திங்கட்கிழமை | இதழ் : 99 | பக்கங்கள் : 16







# மாகாண சபை ஆட்சி முறையை நிராகரித்து வவுனியாவில் பேரணி!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நடத்தியது பல மாவட்டங்களிலிருந்தும் மக்கள் திரள்வு

வவுனியா, மார்ச் 14

மாகாண சபை முறைமையை (13ஆவது திருத்தம்) எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று வவுனியாவில் பெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பண்டாரவன்னியன் சிலைக்கு முன்பாக மாவீரர் ஒருவரின் சகோதரர் ஈகைச்சுடர் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து பிற்பகல் மணியளவில் பேரணி ஆரம்பமானது. 15

## சிமெந்தின் விலை ரூ. 350ஆல் உயர்வு!

கொழும்பு, மார்ச் 14

இறக்குமதி செய்யப்படும் மற்றும் உள்நாட்டில் உற்பத்தியாகும் 50 கிலோ சிமெந்து பைக்கெற்றின் விலை 350 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 50 கிலோ கிராம் எடைகொண்ட சிமெந்து பைக்கெற்றின் விலை 1,850 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

முன்னதாக 50 கிலோ சிமெந்து பைக்கெற் 1500 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்ட போதும் அதிக விலைக்கே விற்பனை செய்யபட்டு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மீன்பிடி நடவடிக்கைகளில் இந்தியா முதலீடு செய்யும்!

### ஒத்துழைக்குமாறு கேட்கிறார் இந்திய தூதர்



யாழ்ப்பாணம், மார்ச் 14

"இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தில் மீன்பிடி சம்பந்தமான முதலீடுகளை செய்து, அதன் மூலம் வடக்கு மீனவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.", என்று யாழ்ப்பாணம் வந்துள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியா உங்களுடைய சகோதர நாடு. உங்களுக்காக என்றும் அக்கறையுடன் செயல்படும். வடக்கு மீனவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அரச தரப் 15

## புலமைப்பரிசில் பெறுபேறு நேற்றிரவே வெளியாகியது!

கொழும்பு, மார்ச் 14

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு வெளியாகின.

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சர் உத்தரவிட்டிருந்தார். எனினும், 15

## கொக்குவில் இந்து மாணவனுக்கு புலமைப்பரிசிலில் 198 புள்ளிகள்!



யாழ்ப்பாணம், மார்ச் 14

2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் தமிழ்செல்வன் கஜலக்ஷன் 198 புள்ளி களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

புலமைப்பரிசில் 15

## ஜோன். பொஸ்கோவில் 151 மாணவர்கள் சித்தி!

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயத்தில் 151 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர். 15

## டெங்குக்கு மரணமான மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



தென்மராட்சி, மார்ச் 14

டெங்கு நோயால் மரணமான தென்மராட்சி - மீசாலையை சேர்ந்த மாணவனான வசந்தன் அஜய் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். 15

## இந்தியப் பிரதமர் மோடி 30ஆம் திகதி வருகிறார்!



கொழும்பு, மார்ச் 14

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். அவர் இந்தியாவிலிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கு (பலாலி) 15

## ஜனாதிபதியுடனான பேச்சு புளொட்டின் முடிவு நாளை!

### சித்தார்த்தன் எம். பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அழைப்பை ஏற்று பேச்சுக்கு செல்வதா என்பது தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடிப் பேசும் கூட்டத்திலேயே இறுதி முடிவு எடுக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான 15

## பேருந்து கட்டணங்கள் இன்றிரவு முதல் உயரும்!

கொழும்பு, மார்ச் 14

பேருந்து கட்டணங்கள் இன்று செவ்வாய்க் கிழமை நள்ளிரவு அதிகரிக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறைந்த பட்சகட்டணமாக 19 அல்லது 20 ரூபாய் நிர்ணயிக்கப்படும் என்று கூறப்படுகின்றது. தற்போது, குறைந்தபட்ச கட்டணமாக 17 ரூபாய் இருக்கும் நிலையில், அதனை 30 ரூபாயாக நிர்ணயிக்கும்படி பேருந்து உரி 15

## டீசலின் விலை 120 ரூபாயால் மீண்டும் அதிகரிக்கப்படலாம்

### பெற்றோலிய கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச் 14

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் ஒரு லீற்றர் டீசலின் விலையை 120 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் டீசலில் 120 ரூபாய் நட்டம் ஏற்படுகின்றபோதிலும் 55 ரூபாயால் மட்டுமே தற்போது உயர்த்தப்பட்டது. 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் தேசியக் கூட்டமைப்பை சந்திக்க அழைப்பு விடுத்திருப்பது தெரிந்ததே.

பல மாதங்களாக இப்படியொரு சந்திப்பு நடக்கும் என்று கூறப்பட்டுவந்தபோதிலும் ஏனோ நடக்கவில்லை. எந்த வேளையிலும் அழைப்பு வரலாம் என்று கூட்டமைப்பும், குறிப்பாக சம்பந்தன் - சுமந்திரன் தரப்பு காத்திருந்ததும் தெரிந்தவைதான்.

இப்போது நாளை செவ்வாய்க்கிழமை சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்த சந்திப்பை கூட்டமைப்பின் பங்காளிக்கட்சியான ரெலோ நிராகரித்திருப்பதுடன், அதில் கலந்துகொள்ள வேண்டாம் என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கும் கடிதம் எழுதியிருக்கின்றது.

அந்தக் கடித்தில், இந்தியாவை திருப்திப்படுத்துவதற்காகவே அவசரம் அவசரமாக கூட்டமைப்பை இப்போது ஜனாதிபதி அழைத்திருக்கிறார் என்றும், அரசாங்கம் தற்போது சந்தித்துவரும் நெருக்கடிகளை திசை திருப்பும் முயற்சியே இது என்றும் ரெலோ ஆரூடம் தெரிவித்திருக்கின்றது.

இனப்பிரச்னை என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லை என்று திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்கின்ற ஜனாதிபதி, கூட்டமைப்பை சந்திப்புக்கு அழைத்தாரே தவிர இனப்பிரச்னை தொடர்பாக பேசுவோம் வாருங்கள் என்று அழைக்கவில்லை.

அப்படி ஓர் எண்ணம் அவரிடம் இருக்கும் என்றும் கருத இடமில்லை.

நமது அரசியல் விமர்சகர்களும், ஏன் ரெலோவும்கூட, இந்தியாவிடம் உதவிக்கு எதிர்பார்த்திருக்கும் இலங்கை அரசு, இந்தியாவை திருப்திப்படுத்துவதற்காகத்தான் கூட்டமைப்பை அழைத்திருக்கின்றது என்று எழுதியும் கூறியும் வருகின்றனர்.

இவர்களை அழைப்பதன் மூலம் இந்தியாவை திருப்திப்படுத்தலாம் என்று எந்த நம்பிக்கையில் எழுதுகிறார்கள் என்பது தெரியவில்லை.

இந்த அரசாங்கம், தமிழர் காணிகளை பல்வேறு காரணங்களைக் கூறி அபகரித்து வருகின்றது.

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை பௌத்தமயமாக்க முயற்சிக்கிறன்றது.

இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வகையில் பிரதேச செயலக பகுதிகளை மாற்றி சிங்கள மயமாக்க முயற்சிக்கிறது.

இப்படி, பல்வேறு குற்றச்சாட்டுக்களை இந்த ஆட்சி அமைந்ததில் இருந்து தொடர்ச்சியாக சொல்லிவரும் நாம், அதனை நிறுத்துமாறு கோருகின்றோமே. அதற்கான தரவுகளுடன் -ஆதாரங்களுடன் ஜனாதிபதியைச் சந்தித்து, அவற்றை உடன் நிறுத்துங்கள் என்று கேட்பது தமிழ் மக்களின் உரிமைகளை விட்டுக்கொடுப்பதாகிவிடப்போவதில்லை.

இதனை நிறுத்த வேண்டியவர் ஜனாதிபதி மாத்திரமே. அதனை அவருடன் பேசித்தான் தடுக்க முயற்சிக்கவேண்டும்.

நாம் யுத்தம் செய்துகொண்டு நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை. பிரிக்கப்படாத நாட்டுக்குள் சமஷ்டி தீர்வைக் கோரும் நாம், அதனைக் கோருவதன் தார்மீக உரிமையை, இந்த நாட்டின் ஜனாதிபதியிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகின்றோம்.

இந்த நாட்டில் இனப்பிரச்னை என்ற ஒன்றே இல்லை என்று நினைத்துக்கொண்டிருக்கின்ற ஒருவரிடம் உங்கள் கருத்து தவறானது என்று அவர் நம்புமளவிற்கு எமது நியாயங்களை எடுத்துரைப்பதில் என்ன குறைந்துவிடப்போகின்றது என்பதும் தெரியவில்லை.

இப்போது, இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காகவே சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது என்ற ஊகம் சரியானது என்றே வைத்துக்கொள்வோம்.

அப்படியெனில், இனி என்ன நடக்கும், 'பார்த்தீர்களா, அவர்களை நான் பேச்சுக்கு வாருங்கள் என்று அழைத்தேன். ஆனால் அவர்கள் ஒற்றுமையாக வந்து தமது பிரச்னையைச் சொல்வதற்கு பதிலாக, ஒவ்வொருவரும் வெவ்வேறு கோரிக்கைகளுடன் பிரிந்துகொண்டு பேச்சுக்கு வர மறுக்கின்றனர்' என்றல்லவா இலங்கை அரசு இந்தியாவிடம் சொல்லி, நல்லபிள்ளை ஆகப்போகின்றது.

'இப்படித்தான், நீங்கள் எங்களை வற்புறுத்தி ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுத்தீர்கள். அதற்கு ஒரு பகுதி தமிழர்கள் ஆதரவாகவும் இன்னுமொரு பகுதியினர் எதிராகவும் இருந்து அந்த தீர்வையே பயனற்றதாக்கிவிட்டனர். அதற்குப் பின்னரும் நீங்கள் அவர்களுக்கு தீர்வைக் கொடுங்கள் என்றால், நாம் என்ன செய்யமுடியும்?' என்று இலங்கை, இந்தியாவிடம் கேள்வி கேட்டால், அதற்கு இந்தியா என்ன பதிலை சொல்லவேண்டும் என்பதையும் அல்லவா ரெலோ சொல்லவேண்டும்?

**- ஊர்க்குருவி**

# அரசியல் ரீதியில் மஹிந்தவை இல்லாமல் செய்வதவர் பஸில்!

## விஜயதாஸ ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, மார்ச் 14

அரசியல் ரீதியாக மஹிந்த ராஜபக்ஷவை இரண்டு முறைகள் இல்லாமல் செய்த பஸில் ராஜபகஷ, மூன்றாவது முறையாக நாட்டை இல்லாமல் செய்வதற்கே தற்போது வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது தொடர்ந்துரைத்த அவர்,

அமெரிக்க குடியுரிமையை கொண்ட பஸில் ராஜபக்ஷ, அமெரிக்க குடியுரிமையையும் வைத்துக்கொண்டு அமைச்சுப் பதவியை பெற்றுக்கொள்வதற்காகவே அரசியலமைப்பின் 20ஆவது சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

20ஆவது சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டபோது அரசாங்கத்தின் பக்கம் 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கவில்லை.

இந்நிலையில் 20ஆவது சீர்திருத்தத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அரசாங்கத்திலிருந்தும் அமைச்சுப் பொறுப்புகளிலிருந்தும் விலக்குவதாக உறுதிமொழியளித்து முஸ்லிம் கட்சிகள் இரண்டை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அரசாங்கம் பெற்றுக்கொண்டது.

இந்நிலையில் அவர்களுக்கு வழங்கிய உறுதிமொழிக்கு அமைவாக, கப்பம் பெறுவதை போன்றே அரசாங்கமானது அவர்கள் இருவரையும் வெளியேற்றுவதற்கு தீர்மானித்துள்ளது.

இதேவேளை, பஸில் ராஜபக்ஷவை நிதியமைச்சராக நியமித்தால் நாட்டின் பொருளாதாரம் மட்டுமன்றி முழு நாடுமே அழிவுப் பாதைக்கு செல்லும் என்பதை நாம் முன்கூட்டியே கூறினோம்.

பஸில் ராஜபக்ஷ யார் என்பதை நாட்டு மக்கள் இன்னும் புரிந்துகொள்ளவில்லை.



பஸில் ராஜபக்ஷ என்பவர், மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் ரீதியாக இல்லாமல் செய்வதற்காக இரண்டு முறை ஒப்பந்தம் செய்துகொண்ட ஒருவர். அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவர் தனது ஒப்பந்தத்தை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றிக்கொண்டார்.

அவர் இந்த, முறை மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஸ மட்டுமன்றி முழு நாட்டையும் இல்லாமல் செய்வதற்காக மூன்றாவது ஒப்பந்தத்தை செய்துகொண்டு பஸில் ராஜபக்ஷ வந்துள்ளார். நிதி அமைச்சை செயல்படுத்துவதற்காக நிதித்துறை சார்ந்த போதிய அறிவு இருப்பது அவசியம் - என்றார். (கே)

# அரசாங்கம் என்ற ஒன்று இல்லாதநிலையில் நாடு!

வவுனியா, மார்ச் 14

நாட்டில் அரசாங்கம் ஒன்று இல்லாத நிலைமையே தற்போது உருவாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

வவுனியாவுக்கு வந்துள்ள அவர், நேற்று செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

நாடு மிகவும் பயங்கரமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. வாழ்வாதார செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது பொருட்களின் விலையை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுரை எவ்வித முயற்சிகளையும் எடுக்கவில்லை.

விலைகளைக் கட்டுப்படுத்தல் என்ற காலாவதியான இயந்திரத்திலிருந்து தாம் விலகிக்கொள்வதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்திருந்தார். அரசாங்கம் ஒன்றால் இதனை செய்ய முடியுமா?

உண்மையில் அரசாங்கமானது, நுகர்வோர் அதிகார சபை, விலை நிர்ணய சபை, பொது மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழு என்பவற்றை எதற்காக உருவாக்குகின்றது? நாட்டு மக்களை பாதுகாப்பதற்காகவே இவ்வாறான சபைகள் உருவாக்கப்படுகின்றன.

முறையற்ற வகையில் வரியை அறவிடுவதற்காக இந்த நிறுவனங்கள் உருவாக்கப்படவில்லை. தற்போதைய நிலையில் அரசாங்கமானது பொருட்களின் விலையை கட்டுப்பாடின்றி அதிகரித்து வருகின்றது.

பெற்றோல், டீசலின் விலையை அதிகரித்துள்ளுது. சுதந்திரத்துக்குப் பின்னர் முன்னெப்போதும் இவ்வாறு விலை உயரவில்லை. ஒரு லீற்றர் டீசலின் விலையை 75 ரூபாயால் அதிகரித்தது இதுவே முதல் சந்தர்ப்பம் அல்ல. கடந்த இரண்டு மாதங்களுக்குள் எரிபொருள் விலை பல சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு இறாத்தல் பாணின் விலை 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வை மக்களால் பொறுத்துக்கொள்ள முடியுமா? இது உண்மையில் வருந் தத்தக்க தருணமாகும் - என்றார். (கே)

## கழிவு தேயிலையுடன் இரண்டு நபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 14

கண்டி, கம்பளை பிரதேசத்தில், 3,346 கிலோ கழிவுத் தேயிலையுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கம்பளை பிரதேசத்தை சேர்ந்த 47 மற்றும் 53 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, கம்பளை, ருக்வெல்ல சந்திக்கு அருகில் வைத்து லொறியொன்றை வழிமறித்து விசேட அதிரடிப் படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது கழிவுத் தேயிலை கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில், வெலம்பொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## லொறியில் ஏற்றிச்சென்ற 13 எருமை மாடுகள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 14

கண்டி, உடவளவை பிரதேசத்தில் லொறியில் சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 13 எருமை மாடுகள் மீட்கப்பட்டன. அத்துடன், அவற்றை கடத்திக் கொண்டு சென்ற இருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர்.

ராகமை திஸ்ஸமஹாராம ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 62 மற்றும் 48 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உடவளவ பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து. தெமட்டகல வழியாக பயணித்த லொறியொன்றை வழிமறித்து சோதனை செய்த விசேட அதிரடிப்படையினர் 13 எருமை மாடுகளும் மீட்கப்பட்டன. (கே)

Eelanadu
14.03.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பேச்சுக்களின் பயன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விற்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் மாறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஆனால், குறித்த சந்திப்பு தொடர்பில், சம்பந்தன் உறுதியாக இருப்பதாகவே தெரிகின்றது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களின் தலைவர்களிடம் மாறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் இந்த சந்திப்பு தொடர்பில் சந்தேகம் தெரிவித்திருக்கின்றார். அதாவது, தமிழ் மக்களுக்கு பிரச்னையே இல்லையென்று வாதிட்டுவரும், ஜனாதிபதி கோட்டாபயவுடன் கூட்டமைப்பு எந்த அடிப்படையில் சந்திப்பதென்று கேள்வி எழுப்பியிருக்கின்றார். இதேவேளை, கூட்டமைப்பின் பிரித்தானிய கிளை - இந்த நேரத்தில் ஜனாதிபதியை சந்திப்பது சரியானதாக அமையாதென்று குறிப்பிட்டிருக்கின்றது.

ரணில் - மைத்திரி அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற வகையில் பேசியதை ஓரளவு நியாயப்படுத்தக் கூடியதாக இருந்தது. ஏனெனில், ரணில் - மைத்திரி அரசாங்கம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் உடன்பட்டது. அந்த அடிப்படையிலான, புதியதோர் அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கு கொள்கையளவில் இணங்கியிருந்தது. ஆனால், இந்த அரசாங்கம் அப்படியான ஒன்றல்ல. அரசியல் ரீதியில் தமிழ் மக்களுக்கு எந்தவொரு பிரச்னையும் இல்லையென்பதே ஜனா திபதி கோட்டாபயவின் நிலைப்பாடு. இந்த நிலையில் வெளிப்படையான நிபந்தனைகளின்றி, ஜனாதிபதியை சந்திப்பது, அடிப்படையில் அரசாங்கத்திற்கே சாதகமாக அமையும். இதேவேளை, இந்தியாவின் தலையீடுகளுக்கும் குந்தகத்தை ஏற்படுத்தும். நாங்கள் கூட்டமைப்புடன் பேசிக் கொண்டிருக்கின்றோம் - சம்பந்தன் சில விடயங்களில் இணங்கியிருக்கின்றார் - என்னும் அடிப்படையில், அரசாங்கம் இந்தி யாவிடம் கூறுமாக இருந்தால், பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதம் பயனற்ற ஒன்றாகும். நிச்சயம் இதுதான் நடக்கும். ஏனெனில், சம்பந் தனின் பலவீனத்தை ராஜபக்சக்கள் நன்கறிவார்கள்.

அரசாங்கத்துடன் பேசுவதில் எந்தவொரு பிரச்னையும் இல்லை. அரசாங்கத்துடன் பேசத்தான் வேண்டும். ஆனால், ஒவ்வொரு பேச்சுக் களின் பின்னரும் வெறுங்கையுடன் திரும்புபவர்களாக தமிழர்கள் இருக்கக்கூடாது. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தை சம்பந்தன் உச்சளவில் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால், வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டுமென்னும் தனது சுயநலத்தால், இறுதியில் சம்பந்தன் அனைத்து வாய்ப்புக்களையும் வீணாகினார். ஜனாதிபதி புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசினால், சம்பந்தன் அதனை நிச்சயம் ஆமோதிப்பார். புதிய அரசியல் யாப்பு வந்துவிட்டால் அனைத்து பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என்றவாறான கதைகளை மக்களுக்கு சொல்ல முற்படுவார். முரண்பாடுள்ள இரண்டு தரப்புக்களும் இணக்கப்பாட்டுடன் செயல் படுவதான தோற்றம் காண்பிக்கப்பட்டால், இந்தியாவின் ஈடுபாடும், மேற் குலகத்தின் மனித உரிமைகள் சார்ந்த கரிசனையும் வீரியமிழக்கும்.

இதனை தவிர்க்க வேண்டுமாயின், ஒன்றில் சமரசப் பேச்சை கூட்டமைப்பு தவிர்க்க வேண்டும் அல்லது, பேச்சில் கலந்துகொண்டு தங்களின் நிலைப்பாடுகளை ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும். பேச்சு முடிவுற்றதும், பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்த வேண்டும். கூட்டமைப்பின் பேச்சுக்களில் சம்பந்தனும், சுமந்திரனுமே வழமையாக பேசுவதுண்டு. இதற்கு மாறாக ஏனையவர்கள் தங்களின் நிலைப்பாடுகளை ஆணித்தரமாக வலியுறுத்த வேண்டும். தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, பல பேச்சுக்களை தமிழ் மக்கள் கண்டிருக்கின்றனர்.

இந்தப் பேச்சுக்களால் எதை அடைய முடிந்தது? ஒன்றுமில்லை. ஒன் றையும் அடைய முடியவில்லை - ஏமாற்றிவிட்டார்கள் - இப்படி கூறுவதில் என்ன கெட்டித்தனம் இருக்கின்றது? 2009இற்கு பின்னரான காலப் பகுதியிலும், பல சுற்று பேச்சுக்களில் சம்பந்தன் ஈடுபட்டிருக்கின்றார். மஹிந்தவுடன் பல சுற்று பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த அனுபவங்களிலிருந்து பாடம் படிக்க முடியாவிட்டால் - செல்வநாயகம் கூறிய கடவுளாலும் தமிழர்களின் அரசியல் உரிமைகளை காப்பாற்ற முடியாது.

# சதுரங்க தட்டில் சம்பந்தன்!

அலசுவது இராஜதந்திரி



ஒரு சதுரங்க ஆட்டத்துக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தற்போது காணப்படு கின்றார்.

நாளைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சு மேற்கொள்ள இரா. சம்பந்தன் தயாராகவுள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்துள்ளமையும், தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் அந்தப் பேச்சுக்களுக்கு முன்வந்துள்ளமையும் வரவேற்கப்படவேண்டிய விடயங்களாகும். ஒருபுறம் அரசியல் நெருக்கடியாலும் மறுபுறம் பொருளாதார நெருக்கடியாலும் நாடு பெரிதும் சங்கடமான நிலைக்குள்ளா கியுள்ளது. எவ்வித அரசியல் அனுபவமற்ற வராக வெறுமனே தமிழீழ விடுதலைப் புலி களை வெற்றிகொண்டதை முன்னிறுத்தி அரசியலுக்கு வந்தவரான இன்றைய ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ, தற்போது அவரின் அரசாங்கத்திலிருப்போராலேயே கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளா கியுள்ளார். அரச நிர்வாகத்தையும், பொரு ளாதார நடவடிக்கைகளையும் தவறாகக் கையாண்டு முழு நாட்டையும் ஜனாதிபதி குட்டிச்சுவராக்கி விட்டுள்ளார் என்பதே நாட்டு மக்களின் குற்றச்சாட்டாக இருக் கின்றது.

இத்தகைய பின்னணியிலேயே தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பேச்சுக்களுக்கு வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் தரப்பு பல்வேறு பேச்சுக்களிலும் கடந்த காலங்களில் ஈடுபட்டு நம்பி மோசம் போனதே வரலாறாக இருக்கின்றது. இதனை நன்கறிந்தவராகவே தமிழ் தேசிய கூட்ட மைப்பு தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதி பதியின் சுயலாபத்துக்காக பேச்சு நடத்து வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத்தெரிவித்துள்ளார். இவ்வாறு இரா. சம்பந்தன் கூறியிருப்பது இனிமேலும் தமிழ் தரப்பு அரசதரப்பிடம் ஏமாறுவதற்கு தயாராக இல்லை என்பதையே இடித்து ரைப்பதாக இருக்கின்றது.இருந்தபோதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நாளை நடைபெறவுள்ள பேச்சு வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னைகளை நேரடியாகவே இந்த விசேட சந்திப்பு மூலம் எடுத்துக்கூற வாய்ப்புக் கிடைத்துள்ளது. மறுபுறத்தே பேச்சுக்கு அழைத்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உள்நோக்கம் எதுவாக இருந்தாலும் அதனை தாமும் நாடிபிடித் தறிவதோடு சிறந்த முறையில் ஜனாதிபதியின் நோக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் நல்ல சந்தர்ப்பம் இரா. சம்பந்தனுக்கு கிடைத்துள்ளதென்றே குறிப்பிட முடியும்.

எனவே, ஒரு சதுரங்க தட்டில் காய்களை நகர்த்துவது போல இரா. சம்பந்தன் தமது ஜனாதிபதியுடனான பேச்சுக்களில் நடந்து கொள்ள வேண்டியவராகின்றார்.

ஏனெனில், வடக்கு - கிழக்கு தமிழர் களும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் கடந்த காலங்களில் தாம் எதிர்கொண்ட ஏமாற்றங்களைப்போல எதிர்காலங்களிலும் ஏமாற்றமடையக்கூடாதென்றே கருது கின்றனர்.

எனவே, தமது எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தும் விதத்திலேயே ஜனாதிபதி கோட்டாபயவுடனான இரா. சம்பந்தனின் நாளைய பேச்சு குறித்து லண்டனில் வடக்கு - கிழக்கிலிருந்தும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழர்கள் இரா. சம்பந்தனுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொறிக்குள் சிக்கிவிட வேண்டாமென இரா. சம்பந்தனை எச்சரித்துள்ள அதேசமயம் வடக்கு-கிழக்கு தமிழர்கள் பூரணத்துவமான நல்லிணக்கம் குறித்து எதிர்பார்க்கும் பலதரப்பட்ட விட யங்களையும் சம்பந்தனுக்கான தமது கடிதத் தில் குறிப்பிட்டுள்ளனர்.


ஜனாதிபதி மிகமோசமான அரசியல் கொலையாளிகளையே மரண தண்டனைக ளிலிருந்து பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ள அதேசமயம், நீண்ட காலமாக எவ்வித சட்ட நடவடிக்ககைக ளுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட் டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று தமது கடிதத்தில் கூறியிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாக இருக்கின்றது.

இதுதவிர, வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக காணிகள் அபகரிக்கப் படுகின்றமை மற்றும் பௌத்த சின்னங்களை பாவித்து புதிய குடியேற்றங்களை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்பது மற்றுமொரு முக்கிய கோரிக்கையாகும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த பிரச்னைக்கு தகுந்த தீர்வை அரசு வழங்க வேண்டும் என்பதுகூட பிரதான கோரிக்கையாகும்.

அத்துடன், வடக்கு-கிழக்கு பிச்னைக்கு ஒரு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்க வேண்டுமென்பது பிரித்தானிய புலம்பெயர் தமிழர்களின் மற்றைய முக்கிய கோரிக்கையாகும்.

இந்நிலையில், ஜனாதிபதியின் எந்த வொரு தந்திரோபாயங்களிலும் சிக்காது பேச்சுக்களின்போது தமது நகர்வுகள் மூல மாக ஜனாதிபதியை “கிடுக்கிப்பிடியாக“ பிடிப்பதே சம்பந்தனின் சாமர்த்தியமாக இருக்க வேண்டியதாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மாசி - 14 திங்கட்கிழமை
பிலவ வருடம் - மாசி 30
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : சூன்ய




**மேடம்**
குடும்பத்தினரை அனுசரிப்பதால் நன்மை காண்பீர்கள். முயற்சிகள் கைகூடும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வேலை வாய்ப்பு தொடர்பாக நல்ல செய்தி வந்து சேரும்.

**இடபம்**
பணியிடத்தில் உற்சாகம் குறையாமல் பணியாற்றுவீர்கள். நண்பர்களிடம் பகை எண்ணம் வேண்டாம். நிதானமுடன் பேசுங்கள். தனிப்பட்ட ரகசியங்களை பிற நபர்களிடம் சொல்ல வேண்டாம்.

**மிதுனம்**
உங்கள் அலட்சியத்தால் பணியில் குறைபாடு ஏற்படலாம். தீயநண்பர்களிடம் இருந்து விலகுவது நல்லது. விழிப்புணர்வு தேவை. குடும்பத்தில் சகிப்புத்தன்மையுடன் செயல்படுவீர்கள். பகை விலகும்.

**கடகம்**
புதிய நண்பர் அறிமுகமாவார்கள். பிள்ளைகளால் பெருமை கொள்வீர்கள். பொறுமை அவசியம் பிறர் செயலைக் கண்டு எரிச்சல் அடையாதீர்கள். சமூகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**சிம்மம்**
ஆன்மிக விஷயங்களில் ஈடுபாடு கூடும். வேண்டுதல்கள் நிறைவேறும். வீட்டிலும், பணியிலும் பழைய நடைமுறைகளை மாற்றுவீர்கள். மேலதிகாரி மதிப்புடன் நடத்துவார். செல்வாக்கு கூடும்.

**கன்னி**
தகவல் தொடர்புகளின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். முயற்சிகள் நிறைவேறும். நட்பு வட்டம் விரிவடையும். உடல்நிலை சீராகும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். பணிகளை முடிப்பீர்கள்.

**துலாம்**
பொறுமை தேவைப்படும், குடும்பத்தில் அந்தஸ்து உயரும். திட்டமிட்ட நிகழ்ச்சிக்கு பதிலாக வேறு ஒன்று நடக்கலாம். கவனமாக இருக்கவும். திடீர் செலவுக்காக கைமாற்றாக பணம் வாங்க வேண்டி வரும்.

**விருட்சிகம்**
நீங்கள் பொது விஷயங்களில் ஈடுபட்டுப் பாராட்டு பெறுவீர்கள். உறவினர், நண்பர் மத்தியில் பாராட்டு கிடைக்கப் பெறுவீர்கள். எந்த விஷயத்திலும் கவனம் தேவை. நண்பர்களால் உதவியுண்டு.

**தனுசு**
மற்றவர் பிரச்னையிலும் தலையிட்டு சிரமத்திற்கு ஆளாகலாம். மற்றவரை கேலி பேச வேண்டாம். விட்டுக் கொடுப்பது நல்லது. நீண்ட நாள் கனவான வீடு வாங்கும் ஆசை நிறைவேற ஆரம்பிக்கும்.

**மகரம்**
மாற்று இனத்தவரால் நன்மை ஏற்படும். பழைய பகை தீரும். பணியிடத்தில் வழக்கத்துக்கு அதிகமாக உழைப்பீர்கள். கஷ்டங்களிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தேவை நிறைவேறும்.

**கும்பம்**
பலநாள் குழப்பம் நீங்கும். உற்சாமுடன் பணியாற்றுவீர்கள். முயற்சிகளில் மாற்றங்களை புகுத்தி முன்னேற்றம் காண்பீர்கள். சுயலாபத்திற்காக கொள்கைகளை மாற்றிக் கொள்வீர்கள்.

**மீனம்**
முக்கிய முடிவுகள் எடுக்க குடும்பத்தினரின் ஆலோசனை கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். உடல்நிலை சீர்பெறும். புதிய தொழிலில் முதலீடு செய்வதில் கவனம் தேவை. ஆரோக்கியம் மேம்படும்.

# உக்ரைனின் இராணுவத்தில் இணைந்த தமிழ் இளைஞர் நாடு திரும்ப விருப்பம்





*சென்னை, மார்ச் 14*

உக்ரைன் இராணுவத்தில் இணைந்த கோவை இளைஞர் சாய் நிகேஷ், நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த சாய் நிகேஷ் (21) உக்ரைன் இராணுவத்தின், 'ஜார்ஜியன் நேஷனல் லிஜியன்' என்ற துணை படையில் இணைந்தார்.

பெற்றோர் தங்களது உடல் நிலைக் காரணங்களை கூறி, கண்டிப்பாக திரும்பி வர வேண்டும் என தொடர்ந்து வலியுறுத்தியதால், சாய் நிகேஷ் மீண்டும் இந்தியாவுக்கு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக கோவையில் உள்ள அவரது குடும்பத்தினர் தரப்பில் கூறப்படுகிறது.

சாய் நிகேஷ் குறித்த இத் தகவல் உளவுத் துறை அதிகாரிகள் மூலம் மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சாய் நிகேஷின் தந்தை ரவிச்சந்திரன் தெரிவித்தபோது, "மகனை மீட்டுத் தர அரசிடம் வலியுறுத்தியுள்ளோம். மகன் நல்லபடியாக வர வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு கொடுங்கள். மற்ற விஷயங்கள் குறித்து நான் எதுவும் பேச விரும்பவில்லை" என்றார்.

# உக்ரைனில் இருந்த தமிழக மாணவர்கள் அனைவரும் நாடு திரும்பினார்கள்

## மத்திய அமைச்சருக்கு முதல்வர் ஸ்டாலின் நன்றி

*சென்னை, மார்ச் 14*

உக்ரைன் நாட்டில் சிக்கித் தவித்த தமிழக மாணவர்கள் உள்ளிட்ட இந்திய மாணவர்கள் அனைவரையும் மீட்டதற்கு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.

சென்னை விமான நிலையத்துக்கு உக்ரைன் நாட்டில் இருந்து திரும்பிய தமிழக மாணவர்கள் கடைசி குழுவினரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்றார். பின்னர் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சுப்பிரமணியனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழக மாணவர்கள் அனைவரும் பாதுகாப்பாக திரும்ப நடவடிக்கை எடுத்த மத்திய அரசுக்கும், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்தார்.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா போர் தொடுத்ததால், தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தோரை மீட்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடி நடவடிக்கை எடுத்தார். அதுதொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதினார்.

உக்ரைனில் படித்த 1,921 மாணவர்களில் இதுவரை 1,890 பேர் அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் 1,524 மாணவர்கள் தமிழக அரசு செலவில் அழைத்தவரப்பட்டனர். மீதமுள்ள 366 பேர் அவர்களது சொந்த செலவில் தமிழகம் திரும்பியுள்ளனர். இதுதவிர 31 மாணவர்கள் உக்ரைன் மற்றும் அண்டை நாடுகளில் பாதுகாப்பான பகுதிகளில் குடியேறிவிட்டனர்.

# முன்னாள் அமைச்சரை நேரில் சந்தித்த அ.தி.மு.க ஒருங்கிணைப்பாளர்கள்

*சென்னை, மார்ச் 14*

புழல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரை அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் நேரில் சந்தித்தனர்.

நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலின் போது கள்ள வாக்கு போட முயன்ற தி.மு.க. பிரமுகரை ஜெயக்குமார் தாக்குதல் செய்த காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவியதையடுத்து ஜெயக்குமார் மற்றும் அதிமுக தொண்டர்கள் பலர் மீது புகார் எழுந்ததை தொடர்ந்து ஜெயக்குமாரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

அவர் மீது ஏற்கனவே நிலுவையில் இருந்த 2 வழக்குகளில் கைது செய்யப்பட்டத்தையடுத்து தமிழகம் முழுவதும் ஜெயக்குமாரின் ஆதரவாளர்கள், தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் உயர்நீதிமன்றம் ஜெயக்குமார் மீது போடப்பட்ட 3 வழக்குகளில் இருந்தும் பிணையில் விடுதலை செய்தது.

சிறையிலிருந்து வெளியே வந்த ஜெயக்குமாருக்கு அதிமுக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்த நிலையில், பட்டினப்பாக்கம் வீட்டிற்கு சென்ற முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரை அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் நேரில் சென்று பார்த்தனர்.

# தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி வரும் அண்ணாமலை

*சென்னை, மார்ச் 14*

ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு பாஜக., தயாராக இருப்பதாகவும், தமிழகத்தில் பா.ஜ.க., ஆட்சிக்கு வருவது உறுதி என்றும் அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை தி.நகரில் உள்ள பா.ஜ.க., மாநில அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உபி., யில் மோடி தலைமையில் யோகியின் ஆட்சியில் பாஜக., 68 சதவீத இடங்களில் வென்றுள்ளதாக கூறினார்.

உபி.,யில் ஆளும் கட்சியே மீண்டும் ஆட்சியை கைப்பற்றியிருப்பது வரலாற்று சாதனை என்றும் அண்ணாமலை தெரிவித்தார்.

காங்கிரசிற்கான நேரம் முடிந்துவிட்டது என்ற கூறிய அவர், ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு பா.ஜ.க., தயாராக உள்ளதாகவும் தமிழகத்தில் பாஜக., ஆட்சிக்கு வரும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

கும்மிடிப்பூண்டி வரைக்கும் தான் ஸ்டாலின் அலை என்றும், அதைத்தாண்டி எங்கும் ஸ்டாலின் அலை வீசவில்லை என்றும் அவர் கூறினார். தி.மு.க., வால் தேசிய அளவில் எந்த முன்னணியை உருவாக்க முடியும் என்று கேள்வி எழுப்பியவர், தமிழக மக்கள் பா.ஜ.க., மீது அன்பு செலுத்த தயாராகி விட்டதாகவும் தெரிவித்தார்.

## பிறரன்பு

லூக். 6:36-38

பிறரன்பை நாம் எவ்வழிகளில் காட்டலாம் என்பதை லூக்கா நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். இரக்க குணம் கடவுளுக்கே உரிய குணமாகும். கடவுள் இரக்க முள்ளவர், நீடிய பொறுமை யுள்ளவர் மன்னிப்பவர் என்பதை லூக்கா இன்றைய நற்செய்தி மூலம் காட்டுகின்றார். “ஆண்டவர் இரக்கமும் பரிவும் உள்ள இறை வன், சினம் கொள்ளத்தயங்கியவர் பேரன்பு மிக்கவர் நம்பிக் கைக்கு உரியவர் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர், கொடுமை யையும் குற்றங்களையும் பாவங்களையும் மன்னிப்பவர் ”



(வி.ப 34:6-7)

கடவுள் இரக்கமுள்ளவர். எனவே அவர் பிள்ளைகளாகிய நாமும் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும். மன்னிக்கின்றவர்களாக, அன்பு செய்கின்றவர்களாக இருக்க வேண்டும். இரக்கச் செயல்கள் வழியாக - இறைவனை நாமும் பின்பற்ற வேண்டும், எனவே இத்தவக்காலம் நமக்கு பயனுள்ள காலமாக அமைய இரக்கமுடையவர்களாக , அன்புள்ளவர்களாக மன்னிக்கின்றவர்களாக எமது வாழ்வை மாற்றியமைப்போம்.

- அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா

# ஜனாதிபதியுடன் பேசும் விடயங்களை கூட்டமைப்பாக கூடித்தீர்மானிப்போம்!

## மாவை சேனாதிராசா அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேச்சு மேசையில் முன் வைக்கப்போகும் விடயங்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடித் தீர்மானிக்கவுள்ளோம் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ நல்லெண்ண சமிக்ஞைகளின் பின்னரே ஜனாதிபதியுடனான சந்திப்பு நிகழவேண்டும் என்றும் இல்லாதுவிடின் கூட்டமைப்பை அரசாங்கம் பகடைக்காய் ஆக்கிவிடும் எனவே இந்த சந்திப்பை நிராகரிக்க வேண்டும் என்றும் சம்பந்தனுக்கு கடிதம் மூலம் அறிவித்தது. இந்நிலையில், கருத்து வெளியிட்டுள்ள மாவை சோனதிராசா, ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்திப்பதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடவுள்ளோம்.

செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 இற்கு ஜனாதிபதி எம்மைச் சந்திப்பதற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில், அன்றைய தினம் காலையில் நாம் சந்தித்துப் பேசவுள்ளோம்.

ஜனாதிபதி கோட்டாபய எம்மைச் சந்திப்பதற்கு முன்பொரு சந்தர்ப்பத்தில் நேர ஒதுக்கீட்டை வழங்கிவிட்டு இறுதி நேரத்தில் அந்த சந்திப்பை இரத்துச் செய்திருந்தார். அதன் பின்னர் அவர் சிங்கள, பௌத்த நிலைப்பாட்டிலேயே உறுதியாக நின்றார். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதாக கூறப்பட்ட நிலையில் அதற்கான நிபுணர்கள் குழுவிடம் எமது பரிந்துரைகளை வழங்கிய பின்னரும்கூட அவர் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற கோட்பாட்டையே அமுலாக்குவதற்கு விளைந்து கொண்டுள்ளார்.

இதனைவிடவும், தேசிய இனப்பிரச்னை தொடர்பில் அவர் மௌனமாகவே இருப்பதோடு பயங்கரவாத தடைச் சடத்தை முழுமையாக நீக்குவதையும் விரும்பவில்லை. இவற்றை விடவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக்கூறலை செய்வதற்கும் தயராக இல்லை.

இந்நிலையில், எம்மை அழைத்து என்ன விடயங்களைப் பேசப்போகின்றார் என்ற கேள்விகள் எமக்குள் இல்லாமில்லை. அதேநேரம், அவர் என்ன விடயங்களைப் பேசினாலும் நாம் மேற்படி விடயங்கள் உட்பட எமது மக்கள் அன்றாடம் முகங்கொடுத்து வரும் காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள், காணி அபகரிப்புக்கள் தொடர்பில் எடுத்துரைத்து தீர்வுகளை வழங்குமாறே வலியுறுத்தவுள்ளோம். அதற்கான நிகழ்ச்சி நிரலை நாம் எமது சந்திப்பின் போது தாயரிக்கவுள்ளோம் - என்றார். (ஐ)



# பரதநாட்டிய அரங்கேற்றம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

நீர்வேலி பொன் சக்தி கலாகேந்திரா நாட்டியப்பள்ளி மாணவி அபிநயா கஜேந்திரனின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

“செந்தமிழ்சொல்லருவி“ சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் கலந்துகொண்டார். கௌரவ விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனானந்தாவும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பிரதி அதிபர் திருமதி து.நேசகுமாரும் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் மதிப்பீட்டுரை ஆற்றினார். திருகோணமலை கிண்ணியா தென்கயிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆசியுரை வழங்கினார்.

நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக நட்டுவாங்கம் யாழ். பல்கலைக்கழக நடனதுறை சிரேஷ்ட விரிவுரையாளர் சத்ய பிரியா கஜேந்திரன், பாட்டு யாழ். பல்கலைக்கழக இசைத் துறை முதுநிலை விரிவுரையாளர் தவமைந்தன் ரொபேர்ட், மிருதங்கம் யாழ். பல்கலைக்கழக நடன துறை மிருதங்க விரிவுரையாளர் க. கஜன், வயலின் யாழ். பல்கலைக்கழக இசைத்துறை முன்னாள் விரிவுரையாளர் கே. வேலதீபன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்வில் மூத்த நடன ஆசிரியைகளான கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன், கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் ஆகியோர் ஆசி வழங்கினர். நிகழ்வில் இலங்கையை மையப்படுத்திய சாகித்தியங்களே பயன்படுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சைக்கிள்கள் திருடியவர் பொலிஸாரிடம் சிக்கினார்!

வடமராட்சி, மார்ச் 14

பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பாடசாலை மாணவர்களின் சைக்கிள்களை திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 10 சைக்கிள்கள் கைப்பற்றப் பட்டுள்ளன என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

“விசாரணைகளில் 20 சைக்கிள்களை திருடி விற்பனை செய்துள்ளதாக சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். அவற்றில் 10 சைக்கிள்களே கைப்பற்றப்பட்டுள்ளன. ஏனையவை தேடப்பட்டு வருகின்றன.” என்றும் பொலிஸார் கூறினர். (ஐ-2)



# சர்வதேச பெண்கள் தினம் புங்குடுதீவில் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

தீவக பெண்கள் வலையமைப்பால் சர்வதேச பெண்கள் தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது.

புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புங்குடுதீவு பனை பொருள் போதனாசிரியர் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ விருந்தினர்களாக தூய சவேரியார் ஆலய பங்கு தந்தை ரமேஷ் அடிகளார், புங்குடுதீவு இந்து மத குரு முரளிதர சர்மா, சிறப்பு விருந்தினர்களாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் சட்டத்தரணி புராதனி, அருட்தந்தை கலாநிதி ஜோன் போல் சிவலிங்கம், பிரதிபலிப்பு சிகிச்சையாளர் ப.நிர்மலன் வேலணை கிராம சேவையாளர் பத்மசிறி கனக ரெத்தினம் நோனாவின்சன், சமூக சேவையாளர் புங்குடுதீவு மற்றும் தீவக பெண்கள் அமைப்பினர் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் மாணவ மாணவியரின் அழகிய கலை நிகழ்வுகளும் விழிப்புணர்வு நாடகம் என்பனவும் இடம் பெற்றன. (ஐ)

# பயங்கரவாத சட்டத்தை நீக்குமாறு கிளிநொச்சியில் கையொப்பங்கள்!

கிளிநொச்சி, மார்ச் 14

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்கக்கோரி நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் கையெழுத்து சேகரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

உதயநகர் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணி முதல் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், கரைச்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

பயங்கரவாத தடுப்பு சட்டத்தை நீக்க கோரி நாடாளாவிய ரீதியில் கையெழுத்து சேகரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# அறநெறி பாடசாலை மாணவர்க்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வடமாட்சி, மார்ச் 14

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்துவதற்காக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்ட 2022ஆம் ஆண்டில் யாழ். மாவட்ட அறநெறிப் பாடசாலைகளில் வாராந்த சொற்பொழிவும் - மாதாந்த நாயன்மார் குருபூசை செயல்திட்டத்தின் ஓர் அங்கமாக கரவெட்டி பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. உடுப்பிட்டி மத்திய கலாசார நிலையத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு கனடா ரொறன்ரோவில் வசித்துவரும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்கள் அனுசரணை வழங்கியிருந்தார். சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# யாழ். மாவட்ட செயலகத்தை இன்று ஈ.பி.டி.பி. முற்றுகையிடும்!

**யாழ்ப்பாணம், மார்ச் 13**

**யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தை இன்று திங்கட்கிழமை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துவதற்கு ஈழ மக்கள் ஜனநாயக்க கட்சியின் (ஈ. பி. டி. பி.) கட்சி அழைப்பு விடுத்துள்ளது.**

அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சிவகுரு பாலகிருஷ்ணன் இதற்கான அழைப்பை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில்,

“மக்கள் நலன்கருதிய பிரதேச அபிவிருத்திகளை முன்னெடுக்கும் செயல்பாடுகளை யாழ். மாவட்ட செயலகம் கட்டுப்படுத்தி தன்னிச்சையான நடைமுறைகளை திணிக்க முயல்கிறது.

பிரதேச சபையை மையப்படுத்திய அபிவிருத்தி திட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் முழுமையாக புறக்கணிக்கப்படும் நிலை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் காணப்படுகின்றது. மக்களின் நலன்கள் அவர்களின் விருப்புக்கு அமைவாக இருக்க வேண்டும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்தில் செயலகம் சொல்வது ஒன்று செய்வது வேறொன்றாக உள்ளது.

இவை தொடர்பில் நாம் பிரதேச செயலகங்களில் சுட்டிக்காட்டும்போது அந்த அதிகாரிகள் இந்த உத்தரவுகளை மாவட்ட செயலகமே வழங்குவதாக குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் மாவட்ட செலகத்தின் தன்னிச்சையான முடிவுகளால் மக்கள் பல அவலங்களை எதிர்கொண்டு வருவதை நாம் நாளாந்தம் காணமுடிகின்றது. எனவே, தன்னிச்சையான நடைமுறைகளை யாழ். மாவட்ட செயலகம் முன்னெ டுத்து வருவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது - என்றுள்ளது. (ஐ)



# மேழிவனத்தில் யானை வேலி அமைக்கும் பணி ஆரம்பம்!

முல்லைத்தீவு, மார்ச் 14

ஒட்டுசுட்டான் - மேழிவனம் கிராமத்தைச் சூழவுள்ள வனப்பகுதிகளுக்கு யானை வேலிகள் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாக காணப்படுகின்ற மேழிவனம் கிராமத்தில் தற்போது 75இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தக் கிராமத்தில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் தொல்லை காரணமாக பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாய செய்கைகளும் காட்டு யானைகளால் அழிக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் ஊருக்குள் புகுந்த யானைகள் வீடுகளை உடைத்து சேதப்படுத்தின. நாளாந்தம் யானைகளின் அச்சுறுத்தலாலால் கிராமத்திலுள்ள சகல குடும்பங்களும் பாதிக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் குறித்த கிராமத்திற்கு யானை வேலிகளை அமைத்து தருமாறு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக தற்போது யானை வேலிகளை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கிராமத்தை சூழ 3.5 கிலோ மீற்றர் வரையான பகுதிகளுக்கு முதற்கட்டமாக வேலிகள் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# பாடசாலைகள், கல்வி நிலையங்களை சுகாதார அதிகாரிகள் பரிசோதிப்பர்!

## இன்றுமுதல் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 14

தனியார் பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களைப் பரிசோதிக்கும் சிறப்பு வேலைத் திட்டத்தை இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும்என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு சில கல்வி நிறுவனங்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை கடைபிடிப்பதில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

ஒரு சில கல்வி நிறுவனங்களின் நுழைவாயிலில் கை கழுவுவதற்கான அடிப்படை வசதிகளும் இல்லை என்றும் அவர் கூறினார்.

மாணவர்களின் உயிரைப் பாதுகாப்பதற்காக, அத்தகைய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அவர்கள் கட்டாயப்படுத்தப்படலாம் எனவும் உபுல் ரோகண தெரிவித்தார். (ஐ)

# சமூக, சமய பணியாளர்களுக்கு தந்தை செல்வா நினைவு விருது!

மானிப்பாய், மார்ச் 14

வடக்கு மாகாணத்தில் பல்வேறு சமூக, சமய பணிகளை ஆற்றி வரும் 26 விசேட சமூகப் பணியாளர்களுக்கு தந்தை செல்வா ஞாபகார்த்த விசேட விருதுகள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ மண்டபத்தில் நடைபெறும். யாழ். மாவட்ட தந்தை செல்வா நற்பணி மன்றத்தின் தலைவர் சி. மகேந்திரம் தலை மையில் இந்த நிகழ்வு நடைபெற வுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா, சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், கௌரவ விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில், 150 பேருக்கு ஏற்கனவே பரிசோதித்த அடிப்படையில் இலவச மூக்கு கண்ணாடி வழங்கப்படவுள்ளது. அத்துடன், ரெமிங்ரன் கல்லூரி மாணவர்களின் விசேட கலை நிகழ்ச்சிகளும்நடைபெறும்என்று நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்களான ஸ். கே. தளையரட்ணம், திருமதி எஸ். கோமதி ஆகியோர் அறிவித்துள்ளனர். (ஐ - 5)

# மருத்துவ பீடத்துக்கான மாணவர் அனுமதி உயர்வு

கொழும்பு, மார்ச் 14

2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றியவர்களில் மருத்துவ பீடத்திற்கு இணைத்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

புதிதாக 110 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார். இதற்கமைய, 2020 ஆம் ஆண்டில் கல்வி பொது தராதர உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய உயிரியல் பிரிவு மாணவர்கள் 1,974 பேர் மருத்துவ பீடத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டில் மருத்துவ பீடத்திற்கு 1,961 மாணவர்களும் 2018 ஆம் ஆண்டில் 1,480 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனரென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில் உயர்தரத்தில் தோற்றிய மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 43 ஆயிரத்து 500 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, மார்ச் 14

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வன்னிவிளாங்குளத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சட்டவிரோத துப்பாக்கியைத் தம்வசம் வைத்திருந்த ஒருவரை, நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் கைதுசெய்தனர்.

மாங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே, 32 வயதுடைய நபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை, நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் மாங்குளம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)



# வீதியுடன் வாய்க்காலையும் திருத்துவதற்கு நடவடிக்கை

மானிப்பாய், மார்ச் 14

காரைநகர் பிரதேச சபைக்கு சொந்தமான பத்தர் கேணி வீதியும் அதோடு இணைந்த வாய்க்கால் என்பன விரைவில் விசேட நிதி ஒதுக்கீட்டில் மீள்புரமைப்பு செய்யப் படவுள்ளன.

இந்தவீதி அபிவிருத்தி திட்டம் தொடர்பான முன்னேற்ற கூட்டம் தவிசாளர் ம. அப்புத்துரை தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன் பின்னர் தவிசாளர். ம. அப்புத்துரை மக்கள், மற்றும் அதிகாரிகளுடன் சென்று புனரமைப்பின்றி அழிவடைந்த வீதியையும் வாய்க்காலையும் நேரில் பார்வையிட்டார். (ஐ-5)

# விவசாயக் கற்கைநெறி தொடர்பான கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 14

விவசாயக் கல்லூரிகளின் கற்கை நெறிகள் தொடர்பிலான கருத்தமர்வு நாளை செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மெய்நிகர் வழியில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தமர்வில் கற்கைநெறிகள் தொடர்பான சந்தேகங்களை மாணவர்கள் தீர்த்துக் கொள்ளவும், கற்கைநெறியை தொடர்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவும் முடியும்.

இந்தக் கருத்தமர்வில் வவுனியா விவசாயக் கல்லூரி பிரதிப் பணிப்பாளர் எம். எஸ். றினூஸ் கலந்துகொள்கிறார்.

கருத்தமர்வில் பங்கேற்க விரும்புவோர் சூம் செயலியில் 827 0416 0775 என்ற அடையாள எண் மூலம் இணையலாம். இதேநேரம், https://www.facebook.com/sirakukal.info என்ற தளம் மூலம் நேரலையாகக் காணமுடியும்.

கற்கைநெறிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர; http://soadip.doa.gov.lk/help_ta.html என்ற தளத்தின் மூலம் அறிவுரைகளை பின்பற்றி http://soadip.doa.gov.lk/application.php என்ற இணையத் தளம் மூலம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஏப்ரல் 4ஆம் திகதியாகும். (ஐ)

# அரசுக்கு எதிராக சத்தியாகிரகம் ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு!

கொழும்பு, மார்ச் 14

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகள் உள்ளிட்ட பல வேறு பிரச்னைகளுக்கான தீர்வை வலியுறுத்தி ஐக்கிய தேசிய கட்சி எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பில் சத்தியாக் கிரக போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இதில் எவ்வித பேதமும் இன்றி அனைத்து கட்சிகளையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுப்பதாக ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார நிலவரங்கள் தொடர்பான அறிவுடன் அரசியல் தலைவர்கள் செயல்பட வேண்டும். அவ்வாறான அறிவும் அனுபவமும்மிக்க, சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவரான ரணில் விக்கிரமசிங்கவை தற்போது நியமிக்கப்பட்டுள்ள பொருளாதார பேரவையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வஜிர அபேவர்த்தன குறிப்பிட்டார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், "எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பு ஹைட் பார்க்கில் பிற்பகல் 3 மணிக்கு பெரும் சத்தியாக்கிரக போராட்டத்தை ஐக்கிய தேசிய கட்சியால் ஏற்பாடு செய்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிருந்து மீள்வதற்கும் , நாட்டு மக்களை அதிலிருந்து பாதுகாப்பதற்கும் ஒரே நிலைப்பாட்டினை எட்டுவதற்கு அனைத்து கட்சிகளையும் இதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு கோரிக்கை!

## தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் விடுத்தது

கொழும்பு, மார்ச் 14

**மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குமாறு அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டில் தற்போது மருந்துகளுக்கு பெருமளவு தட்டுப்பாடு நிலவுகிறது. கடந்த சில தினங்களாக மருந்துகளை விநியோகிக்கும் நிறுவனங்கள் மருந்தகங்களுக்கு மருந்துகள் விநியோகத்தை நிறுத்தியுள்ளன.

டொலர் நெருக்கடியால் மருந்துகளை இறக்குமதி செய்ய முடியாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக மருந்து இறக்குமதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறான நெருக்கடியால் மருந்தகங்களால் நோயாளர்களுக்கு மருந்துகளை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

உயர் இரத்த அழுத்தம் , நரம்புடன் தொடர்புடைய நோய் நிலைமைகள் உள்ளிட்ட பல நோய்களுக்கு வழங்கப்படும் முக்கிய மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. தற்போது 29 சதவீதத்தால் மருந்துகளின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், அதற்கான உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னரே மருந்து விநியோகம் முன்னெடுக்கப்படும் என்று இறக்குமதி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இதற்கமைய தற்போது நடைமுறையிலுள்ள மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலை நாட்டின் தற்போதைய நிலைமையில் பொருத்தமானதல்ல. எனவே, அதனை நீக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சீமெந்து, பால்மா உள்ளிட்டவற்றின் கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளமை போன்றே மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையும் நீக்கப்பட வேண்டும். இவ்வாறு கட்டுப்பாட்டு விலையை நீக்குவதன் மூலம் நாட்டில் எதிர்வரும் காலங்களில் ஏற்படக் கூடிய பெரும் மருந்து தட்டுப்பாட்டைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்று அந்த சங்கம் அரசாங்கத்தை கேட்டுள்ளது. (ஐ)

# நாட்டின் நெருக்கடி நிலைக்கு ஜனாதிபதி மட்டுமே காரணம்!

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி



கொழும்பு, மார்ச் 14

"நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசே முழுப் பொறுப்பு. கடந்த ஆட்சி மீது குற்றம் சுமத்திவிட்டு எவரும் நழுவமுடியாது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

"நாடு இன்று கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. சில பிரச்னைகள்தான் வெளியில் தெரிகின்றன. தெரியாத பல பிரச்னைகளும் உள்ளன. எமக்குக் கடன் கொடுப்பதற்கு எவரும் முன்வருவதில்லை. தனித்து விடப்பட்டுள்ளோம். நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி, நிபந்தனைகள் முன்வைக்கப்படுகின்றன. இந்நிலைமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தேசிய அரசு அமைப்பதால் நாட்டின் நெருக்கடி நிலைமையைச்சரிசெய்ய முடியாது. எனவே, தேசிய அரசு அமைப் பதற்கு நாம் உடன்படமாட்டோம். அவ்வாறு அமையும் அரசியல் அமைச்சுப் பதவிகளை வகிக்கவும் மாட்டோம்" - என்றார்.(ஐ)

# கும்பாபிஷேகம்

வடமராட்சி, மார்ச் 13

புலோலி தெற்கு வடுவாவத்தை பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன ஏககுண்டபக்ஷ மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6. 22 மணி முதல் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள்18ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 25 மணிமுதல் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறும். எண்ணெய்க் காப்புச் சாத்துதல் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 முதல் மறுநாள் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 00 மணி வரை இடம்பெறும்.

சிவஸ்ரீக. வித்தியாபரக் குருக்கள் பிர தமகுருக்களாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். தொடர்ந்து 21 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-2)

# முற்போக்காக அரசு செயல்பட்டால் ஜனநாயக ரீதியில் வீழ்த்தப்படும்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, மார்ச் 14

முற்போக்கான முறையில் அரசாங்கம் செயல்படும் போது ஜனநாயக ரீதியில் அந்த அரசு மக்களால் வீழ்த்தப்படும். ஜனநாயக ரீதியில் ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்ததையிட்டு பெருமை கொள்கிறேன். ஜனநாயக ரீதியிலான ஆட்சியால் தனிப்பட்ட பலன்களை இது வரை பெற்றுக்கொள்ளவில்லை. கோவிட் தாக்கத்தால் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தலை நடத்த முடியவில்லை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற வாக்காளர் தின தேசிய நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

18 வயது பூர்த்தியான இளைஞர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தியுள்ளோம். 2018ஆம் ஆண்டுக்கு முன்னர் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் உள்ளூராட்சிமன்ற தேர்தலை விரைவாக நடத்துமாறு வலியுறுத்தி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்பாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள்.

ஜனநாயக ரீதியில் அரசாங்கத்தை முன்னெடுத்து செல்வதற்கு இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும். உரிய காலத்தில் தேர்தல்களை நடத்துவது ஜனநாயகத்தின் பிரதான அம்சமாகும்.1975 மற்றும் 1982ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தேர்தல்கள் பிற்போடப்பட்டதால் இளைஞர்கள் தேர்தல்கள்மீது அதிருப்தியடைந்தார்கள்.

தேர்தல்கள் பிற்போடப்பட்டதால் 1988 மற்றும் 1989ஆம் காலப்பகுதிகளில் இனக்கலவரம் ஏற்பட்டு பெரும் விளைவை ஏற்படுத்தியது. 2005ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தினேன் - என்றார். (ஐ)

# கொழும்பில் நாளை போராட்டம் ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு!

கொழும்பு, மார்ச் 14

அரசாங்கத்தின் தூரநோக்கற்ற கொள்கைகள் மற்றும் தீர்மானங்களால் அண்மைக் காலங்களில் நாட்டுமக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றனர். அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக நாளை செவ்வாய்க் கிழமை மாரும் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தவுள்ளது.

எனினும், இந்தப் போராட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களை அணிதிரளுமாறு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளபோதும், போராட்ட இடம் குறித்த தகவல்களை அந்தக் கட்சி நேற்றுவரை வெளியிடவில்லை.

போராட்டம் நடைபெறவுள்ள இடம் பற்றிய தகவல்களை முன்கூட்டியே வெளியிடும் பட்சத்தில், அரசாங்கம் பொலிஸார் ஊடாக போராட்டத்திற்கு எதிரான தடை உத்தரவைப் பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என்பதனாலேயே அதனை இறுதி நேரம் வரையில் வெளிப்படுத்தாமல் இருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் கடந்த நவம்பர் மாதம் அரசாங்கத்திற்கு எதிராகப் பெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் கொழும்பு ஹைட்பார்க் மைதானத்தில் நடைபெறும் என்று ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் போராட்டத்தில் மக்கள் கலந்துகொள்வதைத் தடுக்கும் வகையில் பொலிஸாரால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தின் முன்பாகத் திரண்ட மக்கள் கூட்டம் காலிமுகத்திடலில் போராட்டம் இடம்பெற்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இம்முறை மக்கள் ஒன்றுகூடவேண்டிய இடத்தை முன்கூட்டியே அறிவிக்காமல், பெரும் மக்கள் போராட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகியுள்ளது. (ஐ)

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 60 வீதத்தால் உயர்வு

கொழும்பு, மார்ச் 14

கொள்கலன் போக்குவரத்துக்கான கட்டணத்தை இலங்கை கொள்கலன் உரிமையாளர்கள் சங்கம் அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில், நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 60 சதவீதத்தால் உயர்த்தப்பட்டது.

நாட்டில் எரிபொருள்களுக்கான விலை உயர்வைத் தொடர்ந்தே இந்தக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இரசாயன ஆயுதங்கள் என்றால் என்ன? ரஷ்யாவால் அதை பயன்படுத்த முடியுமா?

ஃப்ராங் கார்ட்னர்

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் சிறப்பு அவசரகால கூட்டத்தை கூட்டி, உயிரியல் ஆயுதங்ளை மேம்படுத்த யுக்ரேன் திட்டமிட்டுள்ளது பற்றி விவாதிக்க வேண்டும் என்று வெள்ளிக்கிழமை ரஷ்யா அழைப்பு விடுத்தது.

ஆனால், உக்ரைனும் , அமெரிக்காவும் இதை மறுத்துள்ளன. இது உக்ரைன் நகரங்களில் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தும் திட்டத்திற்கு, ரஷ்யா கூறும் பொய் புகார் என்று அந்நாடுகள் கூறியுள்ளன.

உக்ரைனில் சட்டபூர்வ ஆய்வுக்கூடங்கள் உள்ளன. கோவிட் போன்ற தொற்று நோய்களில் இருந்து மக்களைப் பாது காக்க ஆராய்ச்சியாளர்கள் பணிபுரிந்து வருவதாக அந்நாட்டு அரசு கூறுகிறது.

உக்ரைன் தற்போது போரை எதிர்கொண்டு வருகிறது. அதனால், அந்நாட்டு ஆய்வுக் கூடங்களில் ஏதேனும் அபாயகரமான நோயை ஏற்படுத்தக்கூடிய வைரஸ்கள் இருந்தால் அவற்றை உடனடியாக அழிக்குமாறு உலக சுகா தார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

அப்படியெனில், இரசாயன ஆயுதங் கள் என்றால் உண்மையில் என்ன? அது உயிலியல் ஆயுதங்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

இரசாயன ஆயுதங்களில் பல்வேறுவ வகைகள் உள்ளன. போஸ்ஜென் (phosgene) போன்ற மூச்சடைக்கக்கூடிய இரசாயனங்கள், நுரையீரலையும், சுவாசப் பகுதியையும் தாக்கும். இதனால் பாதிக்கப்படக்கூடியவர், நுரையீரல் சுரப்பிக்குள் மூழ்கிக்போக செய்கிறது. பிறகு, மஸ்டர்ட் வாயு (mustard gas) நெருப்புப்புண்ணை உண்டாக்கும் கருவிகள் உள்ளன. இது தோல்பகுதியை எரித்து, மக்களைப் பார்வையற்றவர்களாக ஆக்கிவிட்டோம்.

அதன் பிறகு, மனிதர்களின் உயிரைப் பறிக்கும் வகைகளும் உள்ளன - நரம்பியலை பாதிக்கும் வகைகள் - இது உடலின் தசைக்களுக்கு செல்லும் மூளையின் தகவல்களை பாதிக்கும். உதாரணமாக, ஒருவரை கொல்ல 0.5 மி.கி வி.எக்ஸ் நரம்பியல் கருவி போதுமானது.

இரசாயன ஆயுதங்கள் என்று அழைக்கப்படும் இத்தகைய ஆயுதங்கள், போர்முனையில் பீரங்கிப்படை குண்டுகள், ஏவுகணைகளில் பயன்படுத்தப்படலாம் . ஆனால், இவையனைத்தும் 1997 ஆம் ஆண்டு ரசாயன ஆயுதங்கள் கூட்டத்தில் கடுமையாக தடைசெய்யப்பட்டது. இது ரஷ்யா உட்பட பெரும்பாலான நாடுகள் கையெழுத்திட்டது. இரசாயன ஆயுதங்களுக்கான சர்வதேச கண்காணிப்பு நெதர்லாந்து நாட்டில் உள்ள ஹேக் பகுதியில் உள்ளது. இதை இரசாயன ஆயுதங்கள் தடை செய்யும் அமைப்பு (OPCW - the Organisation for the Prohibition of Chemical Weapons ) என்று அழைக்கப்படுகிறது. இந்த அமைப்பு சட்டத்துக்கு புரம்பாக பயன்படுத்தப்படும் ரசாயன ஆயுதங்களை கண்காணித்து, அதன் பெருக்கத்தை தடுக்க முயற்சி செய்கிறது.



இவை இதற்கு முன்னர் நடந்த போரில் பயன்படுத்தப்பட்டது. 1980களில் நடந்த முதலாம் உலகப் போரில், ஈரான் - ஈராக் போரில் பயன்படுத்தப்பட்டது. சமீபத்தில், பாதுகாப்புப் படையினருக்கு எதிராக சிரிய அரசால் பயன்படுத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில், தனது இரசாயன ஆயுதங்களில் கடைசி இருப்பை அழித்து விட்டதாக ரஷ்யா கூறியிருந்தது. அன்றிலிருந்து, இரண்டு ரசாயன தாக்குதலை ரஷ்யா நடத்தியுள்ளது என்று குற்றச்சாட்டப்பட்டது.

**மீறப்படும் விதிகள்**

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் சால்ஸ்புரி தாக்குதல் முதலில் நடந்தது. முன்னாள் உளவு அதிகாரி செர்கே ஸ்கிரீபாலுக்கும், அவரது மகளுக்கும் நோவிசோக் என்ற நரம்பியல் நச்சு ரசாயனம் கொடுக்கப்பட்டது. ஆனால், அவர்களுக்கு விஷம் வைத்ததாக கூறப்படும் தகவலை ரஷ்யா மறுத்தது. மேலும், என்ன செய்திருக்கலாம் என்று 20 வகை கேள்விகளுக்கு பதில் தரும் விளக்கத்தை ரஷ்யா வெளியிட்டது.

ஆனால், இந்த விவகாரத்தை விசாரித்த புலனாய்வாளர்கள், இது ரஷ்யாவின் ஜிஆர்யு என்ற இராணுவ உளவுப்பிரிவைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளின் வேலை என்று தீர்மானித்தது. இதன் விளைவாக, ரஷ்யாவின் 128 உளவு அதிகாரிகளும் தூதர்களும் பல்வேறு நாடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அதன் பிறகு, 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட், பிரபல ரஷ்யா எதிர்கட்சி ஆர்வலர் அலெக்சே நவால்னிக்கும் இதேபோன்ற நோவிசோக் மருந்து அளிக்கப்பட்ட போதும் அவர் சில வார மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு மயிறி ழையில் உயிர் தப்பினார்.

**அப்படியெனில், உக்ரைன் மீது ரஷ்யா ரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துமா?**

இந்த போரில் ரஷ்யா விஷவாயுவை பயன்படுத்துமானால், இது பெரும் விதி மீறலாகப் பார்க்கப்படும். இது பெரும்பாலும் மேற்கத்திய நாடுகள் நடவடிக்கை எடுக்கும் நிலைக்கு ஆளாக்கும்.

சிரியாவில் படைகளை தோற்கடிக்க தனது அண்டை நாட்டை உதவ, இந்த ஆயுதங்களை ரஷ்யா பயன்படுத்தியதற்காக எந்த ஆதாரமும் இல்லை. ஆனால், பஷர் அல்-அஸ்ஸாத் தின் அரசுக்கு அது மிகப்பெரிய ராணுவ ஆதரவை அளித்தது. அவர் தனது சொந்த நாட்டு மக்கள் மீதே 12க்கும் மேற்பட்ட இரசாயன தாக்குதலை நடத்தியது.

உண்மை என்னவென்றால், நீண்ட போர் நடந்தால், இராணுவம் போராட்டப் படையினரின் தாக்கத்தை உடைக்க நினைத்தால், எதிர்பாராவிதமாக, இரசாயன ஆயுதங்களை ஒரு சிறந்த வழியாக இருக்கும். இதைதான் அலேப்போவில் சிரியா நடத்தியது.

அதே வேளையில் , இரசாயன ஆயுதங்களிடம் இருந்து உயிரி ஆயுதங்கள் வேறுப்பட்டவை. எபோலோ போன்ற ஆபத்தான நோய் ஏற்படுத்துப்பவை ஆயுதமாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் வாக்கியம்.

சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தபோது, ரஷ்யா மிகப்பெரிய உயிரி ஆயுதத் திட்டத்தைக் கட்டுப்படுத்தியது.

இதில் பிரச்னை என்னவென்றால், தீங்கு விளைவிக்கும் நோய்க் கிருமிகளிடமிருந்து ஒரு நாட்டின் மக்களைப் பாதுகாப்பதற்கான வழிகளில் பணியாற்றுவதற்கும், அவற்றை எவ்வாறு ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்பதில் ரகசியமாகச் செயல்படுவதற்கும் இடையில் பல்வேறு விஷயங்கள் அடங்கி இருக்கிறது. இந்த பகுதியில் உக்ரைன் மீது புகார் அளித்த ரஷ்யா, அதற்கு எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை. ஆனால் அதன் கூற்றுக்கள் பற்றி விவாதிக்க வெள்ளிக்கிழமையன்று அவசர ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தது. ரஷ்யா, சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்தபோது, பயோபிரபராட் என்ற ஆயுதத்தால் நடத்தப்படும் ஒரு உண்மையான உயிரி ஆயுதத் திட்டத்தைக் கட்டுப்படுத்தியது. இதில் சுமார் 70,000 பேர் வேலை பார்த்தனர்.

பனிப்போர் முடிவுக்கு வந்த பிறகு, விஞ்ஞானிகள் அதை அகற்ற சென்றனர். தெற்கு ரஷ்யாவில் உள்ள ஒரு தீவில் வாழும் குரங்குகள் மீது சோதித்த பிறகு, சோவியத் பெருமளவில் உற்பத்தி செய்து, ஆந்த்ராக்ஸ், பெரியம்மை மற்றும் பிற நோய்களை ஆயுதமாக்கியதை அவர்கள் கண்டறிந்தனர். அவர்கள் மேற்கத்திய நகரங்களை இலக்காகக் கொண்ட நீண்ட தூர கண்டங்களுக்கு இடையேயான ஏவுகணைகளின் போர்க்கப்பல்களில் கூட ஆந்த்ராக்ஸ் பரப்பிகளை பரப்பினர்.

இறுதியாக, மரபுசாரா ஆயுதங்களின் இந்த கடுமையான அழைப்பில், “அழுக்கான வெடிகுண்டு” (Dirty Weapon) உள்ளது - கதிரியக்க கூறுகளால் சூழப்பட்ட ஒரு சாதாரண வெடிபொருள். இது கதிரியக்க பரவல் சாதனம் (ஆர்.டி.டி) என அழைக்கப்படுகிறது - ஒரு . இது சீசியம் 60 அல்லது ஸ்ட்ரோண்டியம் 90 போன்ற கதிரியக்க ஐசோடோப்பை (radioactive isotope) சுமந்து செல்லும் வழக்கமான வெடிபொருளாக இருக்கலாம்.

இது ஒரு சாதாரண வெடிகுண்டை விட அதிகமான மக்களைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால் அது ஒரு பெரிய பகுதியை - ஒரு முழு லண்டன் பெருநகரத்தின் அளவை என்று வைத்துக்கொள்ளலாம். அது முழுவதுமாக மாசுபடுத்தப்படும் வரை, வாரக் கணக்கில் வசிக்க முடியாததாக இருக்கும்.

ஒரு அழுக்கான வெடிகுண்டு என்பது ஒரு உளவியல் ஆயுதம் போன்றது. இது மக்களிடையே பீதியை ஏற்படுத்தவும் ஒரு சமூகத்தின் மன உறுதியைக் குறைவாக மதிப்படவும் உட்படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. போரில் அதிகம் பயன்படுத்தியதை நாம் பார்த்ததில்லை. இது ஓரளவு ஆபத்தானது மற்றும் கையாள்வது கடினம் என்பதால், பயனரை தனிப்பட்ட ஆபத்தில் ஆழ்த்துகிறது. ■



# கூட்டமைப்புடனான பேச்சும் சர்வகட்சி மாநாடும் எதற்காக?



**ஜெனிவாவின் தற்போதைய அமர்வில் உரையாற்றிய 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்ததாக பகிரங்கமாகக் கூறி மகிழ்வுறும் அமைச்சர் பீரிஸ், அந்த 31 நாடுகளில் 9 மட்டுமே மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் தகுதிபெற்ற உறுப்பு நாடுகள் என்பதை மறைப்பது அவர்களுக்கு வாக்களித்த அப்பாவி மக்களை ஏமாற்றும் மோசடி. 46:1 தீர்மான நிறைவேற்றலிலும் இப்படித்தான் விசித்திரமான அரசியல் கணக்கொன்றை கட்டவிழ்த்து விட்டு தங்கள் முதுகை தாங்களே தடவிக்கொண்டது கோட்டாபய அரசு.**

பனங்காட்டான்

ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஜெனிவாவை அலைத்தும் ஏமாற்றியும் வரும் இலங்கைக்கு இப்போது ஜெனிவா ஜென்மகண்டமாக மாறி வருகிறது.

எனினும் அவர்களின் உள்மனசு - மனச்சாட்சி போர்க்கால உண்மைகளை ஏற்றுக் கொள்வதால் ஜெனிவாத் தீர்மானங்களை ஏற்று அவற்றின் பரிந்துரைகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரம், பொருட்கள் பற்றாக்குறை, விலைவாசி உயர்வு, அளவுக்கு மீறிய கடன், வங்குரோத்து நிலைமை என்பவை முள்ளிவாய்க்காலிலிருந்தே ஆரம்ப மானவை என்பதை இவர்கள் உண ராதவரை நாடு மீட்சி பெறமுடியாது என்பதே யதார்த்தம்.

நாட்டின் வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான நிதி கல்வித்துறைக்கு ஒதுக்குவது ஒரு காலத்தில் இருந்தது. தமிழ் மக்களின் நியாயமான விடுதலை வேட்கையை நசுக்கவென படைபலத்தை அதிகரித்ததால் கூடுதலான நிதியை காலக்கிரமத்தில் பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கும் நிலை அரசாங்கங்களுக்கு உருவாகியது.

இதில் ஐக்கிய தேசிய கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இன்றைய பொதுஜன பெரமுன ஆகியோரும், அவ்வப்போது இவர்களுக்கு ஆதரவளித்த இடதுசாரிகள் ஆகியோரும் இந்த நிலைமைக்கான பங்காளிகள். இங்கிருந்துதான் அரச பயங்கரவாதம் ஆரம்பமாகியது என்பது தனி வரலாறு. இதுவே இப்போது ஜெனிவா விவகாரமாகியுள்ளது.

இன்றைய இலங்கை அரசாட்சியில் வெளிப்படையாக ராஜபக்ஷ குடும்பத்தினர் எண்மர் முக்கிய தீர்மானங்களை எடுப்பவர்களாக உள்ளனர். இவர்களுள் நால்வர் சகோதரர்கள். மிகுதி நால்வரும் இவர்களின் அடுத்த தலைமுறையினர். இந்தக் குடும்பங்களின் எண்ணுக் கணக்கற்றவர்கள் அரச நிர்வாகத்தில் மூடுபனியாக இயங்குகின்றனர். ராஜபக்ஷக்களுக்கு இணைவாக கோத பாயவின் படைத்துறை சகபாடிகள் நாற்பதுக்கும் அதிகமான தலைமைப் பதவிகளை அலங்கரிக்கின்றனர்.

இந்த அசாதாரண நிர்வாக கட்டமைப்பையே மனித உரிமைகள் ஆணையாளர் தவறாது தமது அறிக் கைகளில் சுட்டி வருகிறார். ஜனநாயகம் என்ற பெயரில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி என்ற கட்டமைப்பில், இராணுவ ஆட்சி எவ்வாறு நகர்த்தப்படுகிறது என்பதை தமது பதவிக்குரிய இராஜரீக சொல்லாடல்களால் ஆணையாளர் வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

ஆனால், இதனை ஏற்றுக் கொள்ளும பகிரங்கப் பக்குவத்துக்கு இலங்கை இன்னும் வரவில்லை. இனியும் வரும்போல் இல்லை. மைத்திரி - ரணில் ஆட்சிக் காலத்தில் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30:1 பொறுப்புக் கூறல் தீர்மானத்தை, தாம் ஜனாதிபதி யானதும் முதற்பணியாக இரத்துச் செய்தார் கோட்டாபாய.

கடந்த வருட மார்ச் மாத 46ஆவது அமர்வில் ஜெனிவா புதிதாக நிறைவேற்றிய 46:1 தீர்மானத் தையும் இந்த மாத அமர்வில் நிராகரித்துள்ளது கோட்டாபாய அரசு.

தங்களின் அனுமதியின்றி நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்று சண்டியன்; பாணியில் பேரவை அமர்வில் கூறிய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்தத் தீர்மானம் செல்லுபடியற்றதாகி விட்டதாக நினைத்திருக்கக்கூடும். 30:1 தீர்மானம் எவ்வாறு இன்னமும் ஜெனிவா பதிவில் இருக்கிறதோ, அவ்வாறே 46:1 தீர்மானமும், இனி வரப்போகின்ற தீர்மானங்களுக்கு ஆதார பலமாக இருக்குமென்பது அமைச்சர் பீரிஸிற்கு தெரியாதிருக்க முடியாது.

ஜெனிவாவில் 30:1 தீர்மானம் வாக்களிப்பின்றி நிறைவேற்றப்பட்டதென்பதையும், 46:1 தீர்மானம் பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டதென்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். 46:1 தீர்மானத்துக்கு பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் 22 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. 11 நாடுகள் எதிர்த்து வாக்களித்ததால் 11 மேலதிக வாக்குகளால் இது நிறைவேறியது. 14 நாடுகள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை. வாக்களிப்பில் பங்குபற்றிய நாடுகளிலிருந்துதான் வெற்றி தோல்வி கணிக்கப்படுகிறது. ஆனால் இலங்கை அரசு அப்போது புதிய அரசியல் கணக்கொன்றை எடுத்துக் கூறி - அதாவது 47 நாடுகளில் 22 மட்டுமே தீர்மானத்தை ஆதரித்தன என்றும் மிகுதி 25 நாடுகள் ஆதரிக்கவில்லையென்றும் தெரிவித்து பித்தலாட்டம் போட்டது.

போர்க்கால அனர்த்தங்களுக்கு பொறுப்புக் கூறுவதை உறுதி செய்ய இலங்கை பலமுறை தவறிவிட்டது என்று இந்த மாத அமர்வில் எடுத்துக் கூறிய ஆணையாளர் பச்சிலற் அம்மையார், இலங்கையின் போர்க்குற்றங்கள் மீது பொருளாதாரத் தடைகள் மற்றும் சர்வதேச வழக்குகள் தொடரப்பட வேண்டுமென்று விடுத்த அழைப்பானது இலங்கை அரசு சற்றும் எதிர்பார்த்திராதது.

இதனுடன் நிறுத்தாது, இலங்கை இராணுவ மயமாக்கலை நோக்கி நகர்ந்துள்ளதென விளித்ததுடன், போர்க்கால ஆதாரங்களைச் சேகரிக்கும் பொறிமுறையை ஆணையாளர் வெளிப்படுத்தியபோதே தங்கள் எதிர்காலம் பற்றிய அச்சம் ஆட்சித்தரப்பினருக்கு ஏற்பட்டது.

இதற்கு முக்கிய காரணம் போர்க்கால நாயகர்களாக சிங்கள தேசம் ஆராதிப்பவர்களே இன்றைய ஆட்சியாளர்களாக இருப்பது. அவ்வேளை ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலர் பதவிகளை வகித்தவர்கள் இன்றைய ஜனாதிபதியும் பிரதமருமே. இவர்களின் பணிப்பில் வன்னிக் களத்தை தாங்களே சமராடி வென்றதாகக் கூறிய கமால் குணரட்ணவும், சவேந்திர சில்வாவும் தற்போதைய பாதுகாப்புச் செயலாளரும் இராணுவ தளபதியும். இந்தக் கூட்டத்தின் முன்னும் பின்னும், இடமும் வலமுமாக போரை முன்னெடுத்த படைத்தரப்பினர் உள்ளனர்.

இந்தப் பின்னணியில் பார்க்கின், போர்க்கால பொறுப்புக்கூறல் - சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறை - ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கை எனப்படும் ஜெனிவாவின் அனைத்துச் செயற்பாடுகளும் தங்களைக் குறி வைக்கும் சர்வதேசப் பொறி என்பதை இவர்கள் நன்குணர்கின்றனர்.

ஒருபுறத்தே ஜெனிவாவை நிராகரித்தவாறு மறுபுறத்தில் சர்வதேசத்தை அமைதிப்படுத்தும் வகையில் சில முன்னெடுப்புகளை கோட்டாபாய ஆரம்பித்துள்ளார். “அனைத்துத் தரப்பி னரையும் அணைத்துக் கொண்டு புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்” என்ற மனித உரிமைகள் ஆணையாளரின் கோரிக்கையை நிறைவேற்றுவதாகக் காட்டும் ஒரு முயற்சியே இது. விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சர் பதவிகளிலிருந்து வெளியேற்றியதால் உருவாகி வரும் புதிய அரசியல் நெருக்கடியையும் தீர்ப்பதற்கு ஒரு கல்லில் இரண்டு காய்களாக எடுக்கப்படும் நடவடிக்கையாகவும் இதனைப் பார்க்க முடிகிறது. தமது அரசின் பங்காளிக் கட்சியாக இருந்தவாறு குடைச்சல் கொடுக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரை அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சில தினங்களுக்கு முன்னர் கோதபாய சந்தித்து உரையாடினார்.

பல தடவைகள் அறிவிக்கப்பட்டு பின்போடப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரை இந்த மாதம் 15ஆம் திகதி சந்திப்பதற்கு அழைப்பு விடுத்துள்ளார் கோட்டாபாய. அத்துடன், முதற் தடவையாக சர்வகட்சி மாநாடு ஒன்றை அவர் நடத்தவிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் அகில உலகுக்கான கண்துடைப்பு நாடகங்களாகவும், சமகால அரசியல் போக்கை தங்களுக்கு ஸ்திர மாக்க அவர் எடுக்கும் நடவடிக்கை களாகவும் பார்க்கலாம்.

மூன்று மாதங்களாக பாராளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாத நிதி அமைச்சராக இருப்பவர் பஸில் ராஜபக்ஷ. நாட்டை மீட்பவர் என்ற அறைகூவலுடன் நிதி அமைச்சராக்கப்பட்ட இவரது காலமே இலங்கையை அதலபாதாளத்துக்குக் கொண்டு சென்றுள்ளது. தட்டுப்பாடு; என்பதையே அரசின் நவீன சுலோகமாக மாற்றியுள்ளவர் இவர். மின்சக்தியின்மையால் தினமும் ஏழு மணிநேர வெட்டு. நாட்டின் சகல வீதி விளக்குகளையும் இரவு வேளைகளில் இம்மாத இறுதிவரை அணைத்து வைக்குமாறு உத்தரவு. 367 வெளிநாட் டுப் பொருட்களுக்கு இறக்குமதித் தடை. 2500 வரையான கொள்கலன்கள் டாலர் இன்மையால் துறைமுகத்தில் தேங்கியுள்ளன. நாடுகளிடம் கடன் பெறுவது இவர்களுக்குப் பழக்கப்பட்டுவிட்டது. அத னால் உலகுக்கே இன்று கடனாளியாகி விட்டது நாடு. இவ்வாறான பெருமை களின் சொந்தக்காரரான நிதி அமைச்சர் பஸிலை - ஊத்தை அமெரிக்கன் என்று சாடியுள்ளார் பதவி பறிக்கப்பட்ட உதயகம்மன்பில.

காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்துக்கு தீர்வில்லை. அடுக்கடுக்கான ஆணைக்குழுக்களே வந்துபோயின. இனியும் குழுக்கள் அமைக்கப்படப் போவதாக செய்திகள் கசிய விடப்படுகின்றன. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்காது அரைகுறை திருத்தத்துடன் சமாளிப்பதற்கு முயற்சி. பயங்கரவாதச் சட்டத்தை முழுமையாக நீக்கக்கோரி நாடு தழுவிய கையெழுத்துப் போராட்டத்தை சுமந்திரன் மேற்கொண்டுள்ளார். யானையின் மீது இலையான் அமர்வது போன்ற முயற்சி இது. முன்னைய நல்லாட்சிக் காலத்தில் இலகுவாகச் செய்திருக்ககூடிய பயங்கரவாத் தடைச்சட்ட நீக்கத்தை, நண்பர்களை பகைக்கக்கூடாதென வாழாவிருந்த தமிழரசுக் கட்சியினர் இப்போது அதற்கு முயற்சிக்கின்றனர் என்று கருத்து வெளியிட்டுள்ளார் சி.வி.விக்னேஸ்வரன்.

மொத்தத்தில் நிதியும் நீதியுமற்ற வங்குரோத்து ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்க, ஜெனிவாவுக்கு இலங்கைக் குழுத்தலைவராகச் சென்ற அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், தமது வழமையான சோடனைக் கதைகளை உலாவவிட்டு, ஜெனிவாவை தோற்கடித்த மகாநாயகன் என தம்மைக் காட்டிக்கொள்ள முயல்கிறார். இவரது கூற்றை நம்பும் கோட்டாபாயவும் அவர் சொல்வதை மேற்கோள் காட்டி தமது அறியாமையை வெளிப்படுத்துகிறார். தற்போதைய 49ஆவது ஜெனிவா அமர்வின்போது இலங்கை விவகாரத்தில் உரையாற்றிய 45 நாடுகளில் 31 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக உரையாற்றின என்பதுவே அமைச்சர் பீரிஸ் கூறும் கதை.

ஜெனிவா பொதுச்சபையில் 193 நாடுகள் உள்ளன. இதில் 47 நாடுகளே மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் உரிமை பெற்ற உறுப்பு நாடுகள். இவை இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை பிராந்திய அடிப்படையில் சுழற்சி முறையில் இடம்பெறுபவை.


அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்ட 31 நாடுகளில் 9 நாடுகள் மட்டுமே மனித உரிமைகள் பேரவையில் வாக்களிக்கும் உரிமை பெற்ற உறுப்பு நாடுகள். மிகுதி 22 நாடுகளும் பேரவையில் உரையாற்ற முடியுமே தவிர வாக்களிக்கும் தகுதியற்றவை. பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் இந்த 9 நாடுகள் சிறுதொகையினர். அமைச்சர் பீரிஸ் கூறுவதுபோல பெரும் பான்மை ஆதரவு இங்கு இலங்கைக்கு இல்லை. இந்த வருட செப்டம்பர் மாத 51வது அமர்வில், அடுத்த கட்ட தீர்மா னத்துக்கு ஜெனிவா செல்கையில் தாம் எங்கே உள்ளோம் என்பதை இலங்கை புரிந்துகொள்ள இன்னமும் ஐந்து மாதங்களே உள்ளன. அதற்கு முன்னராக, தப்பான எண்ணுக் கணக்குகளை பொய்யும் புரட்டும் கலந்து வெளியிடுவதன் மூலம் தங்க ளுக்கு வாக்களித்த அப்பாவி மக்களையே இவர்களால் ஏமாற்ற முடியும். சர்வதேசத்தை அல்ல! ■


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**24.** இங்கு காட்டப்பட்டுள்ள அட்டைத்தாளை மடித்து ஒரு பெட்டியைச் செய்யும் போது அது தோன்றும் விதத்தினைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.





(1) (2) (3)


**25.** 6 பேர் 8 நாட்களில் கிணறு ஒன்றை வெட்டி முடிக்கலாம். அவர்கள் 6 பேரும் மூன்று நாட்கள் வேலை செய்து முடித்தபின் அவர்களில் ஒருவர் சுகயீனம் காரணமாக வேலைக்கு வரவில்லை. எனின் மீதி வேலையை 5 பேர் சேர்ந்து எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?

(1) 5 நாட்களில் (2) 7 நாட்களில் (3) 6 நாட்களில்

**26.** குமாரின் பிறந்ததின கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட 65 பேர்களிடையே 47 பேர் பரிசுப்பொதியுடனும் 26 பேர் பூச்செண்டுடனும் காணப்பட்டனர். அவர்களில் சிலர் இரண்டையும் வைத்திருந்தனர். 8 பேரிடம் இவை எதுவும் காணப்படவில்லை. எனின் கலந்து கொண்டவர்களில் பரிசுப்பொதி மற்றும் பூச்செண்டு ஆகிய இரண்டையும் வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 16 (2) 8 (3) 12

**● தரப்பட்ட தரவைப் பயன்படுத்தி 27, 28 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**




ஐங்கோணி வடிவமுள்ள பெட்டியொன்று மணிக்கூட்டுத் திசையில் சுழலுகின்றது. முன்பக்க முகப்பில் காட்டப்பட்ட இலக்கத்திற்குச் சமமான செக்கன்கள் கடந்த பின்னர் அதற்கடுத்த முகம் முன்பக்கத்திற்கு வரும்.

**27.** 10 செக்கன்களின் பின் முன்பக்க முகப்பில் காணப்படும் இலக்கம் எது?

(1) **v** (2) **iv** (3) **i**

**28.** முன்பக்கம் தென்படும் முகப்பு சுழன்று மீண்டும் அதே இலக்கமுடைய முகப்புத் தென்பட எவ்வளவு நேரம் தேவைப்படும்?

(1) 21 செக்கன்கள் (2) 15 செக்கன்கள் (3) 12 செக்கன்கள்


**29.** ஒரு பேருந்தில் உள்ள ஆண் பயணிகளின் எண்ணிக்கை அதில் உள்ள பெண்பயணிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். அடுத்த தரிப்பிடத்தில் 4 பெண்கள் பேருந்தில் ஏறிய பின்னர் ஆண்களின் எண்ணிக்கையும், பெண்களின் எண்ணிக்கையும் சமமாகும். இப்போது பேருந்தில் உள்ள பயணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 8 (2) 12 (3) 32

**30.** பணம் எடுக்கும் இயந்திரம் ஒன்றில் முதல் தடவை பணம் எடுக்கும் போது நாம் நினைத்த பணத்தின் இரண்டு மடங்கைத் தரும். இரண்டாம் தடவை எடுக்கும் போது முதல் தடவை எடுத்த பணத்தின் நான்கு மடங்கு கிடைக்கும். இரண்டாம் தடவை எடுத்த பணம் ரூபாய் 1200.00 எனின் முதலில் எடுக்க நினைத்த பணம் யாது?

(1) ரூபாய் 200.00 (2) ரூபாய் 170.00 (3) ரூபாய் 150.00

**31.** அருகே உள்ள வடிவங்களை மட்டும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட சதுரம் எது?







(1) (2) (3)

**32.** ஓர் ஓட்டப் பந்தயப் போட்டியில் இரண்டாவதாக ஓடிச் செல்லும் ஒருவரை பின்னுக்குத் தள்ளி முன்னேறிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனின் இப்போது உங்களுடைய நிலை என்ன?

(1) முதலாம் நிலை (2) இரண்டாம் நிலை (3) மூன்றாம் நிலை

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. | (2) |  |
| 25. | (3) | 6 நாட்களில் |
| 26. | (1) | 16 |
| 27. | (1) | v |
| 28. | (2) | 15 செக்கன்கள |
| 29. | (2) | 12 |
| 30. | (3) | ரூபாய் 150.00 |
| 31. | (3) |  |
| 32. | (2) | இரண்டாம் நிலை |

### கல்வி tv CHANNEL-1

**14.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**14.03.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# வாய் சுகாதாரப் பிரிவு கல்முனையில் திறப்பு

கல்முனை, மார்ச் 14

கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் வாய் சுகாதார பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஏ. ஆர். எம். அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்களுக்கு கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் வழங்கப்படும் சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த சமூக வாய் சுகாதார பிரிவில் வாய் சுகாதார பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றியாஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, வாய் சுகாதார பிரிவை திறந்து வைத்தார். (ஐ)

# எரிவாயுவைபெறகூடியவர்களால் கல்முனையில் நேற்று பரபரப்பு!

கல்முனை, மார்ச் 14

**அம்பாறை மாவட்டத்தில் நேற்றும் நேற்றுமுன்தினம் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள் கல்முனை - நற்பிட்டிமுனை முகவர் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன. பல இடங்களிலிருந்து வருகை தந்தவர்கள் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு பெற வந்தவர்களால் அந்தப் பகுதியில் நேற்று பரபரப்பு ஏற்பட்டது.**

ஏராளமான பொதுமக்கள் வரிசையில் அதிகாலை முதல் நின்ற நிலையில், களஞ்சிய சாலையில் எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கப்படுகின்றன என்று தெரிவித்தமையை தொடர்ந்தே இந்தப் பரபரப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து கல்முனை பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்து நிலைமையை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இதைத் தொடர்ந்து அங்கு வரிசையில் கூடியவர்களிடம் நுகர்வோர் அதிகார சபையினர் விசாரணைகளை நடத்தி எரிவாயு சிலிண்டர்களை வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

இந்த இரு நாட்களிலும் 600 சிலிண்டர்கள்



பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. எனினும், ஏராளமானவர்கள் சிலிண்டர்களைப் பெற முடியாது ஏமாற்றத்துடன் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அரிசி வாங்கச் சென்ற இளம் தாயார் மாயம்!

அக்கரைப்பற்று, மார்ச் 14

அரிசி வாங்குவதற்கு சென்ற 3 பிள்ளைகளின் தாயாரை சுமார் ஒரு மாத காலத்திற்கும் மேலாகக் காணவில்லை என்று அவரின் குடும்பத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சாய்ந்தமருது - பொலிவேரியன் கிராமத்தை சேர்ந்த அப்துல் கபூர் பர்ஸானா (வயது - 34) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

காணாமல் போன தினமான கடந்த ஜனவரி 29ஆம் திகதி, இவர் அரசி வாங்குவதற்காக அக்கரைப்பற்றிலிருந்து கல்முனை நோக்கி பஸ்ஸில் சென்றார் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் என்று பெண்ணின் தந்தையான அப்துல் கபூர் ஊடகங்களுக்குத்



தெரிவித்தார்.

இவர் காணாமல் போனமை குறித்து கல்முனை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காணாமல்போன பெண் கணவனை பிரிந்து வாழ்கிறார் என்றும் மனநோயாளி என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தாயாரின் பிரிவால் மூன்று மாத குழந்தை உள்ளிட்ட அவரின் பிள்ளைகள் செய்வதறியாது திணறி நிற்கின்றனர். தாய்ப்பால் கூட இல்லாமல் மூன்றுமாத குழந்தை அழுத வண்ணம் உள்ளது.

எனவே, இளம் தாய் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் அல்லது இவரை பார்த்தவர்கள் அல்லது இவரைப் பற்றி தகவல் அறிந்தவர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையம் ஊடாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்துக்கு அறியத்தருமாறு பெண்ணின் தந்தை பொது மக்களை கேட்டுள்ளார். (ஐ)



# யானைகள் கூட்டமாக புகுந்ததில் சம்மாந்துறையில் வீடுகள் சேதம்!

சம்மாந்துறை, மார்ச் 14

சம்மாந்துறையின் வீட்டு குடியிருப்புகளுக்குள் புகுந்த யானைகள் மதில்கள், வீடுகளை உடைத்து சேதப்படுத்தியதுடன் பயிர்களுக்கும் அழிவை ஏற்படுத்தியுள்ளன.

சம்மாந்துறை மக்கள் குடியிருப்பு பிரதேசத்தினுல் நேற்று அதிகாலை வேளை இந்த யானைகள் நுழைந்தன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யானைகள் கூட்டமாக அடிக்கடி கிராமத்துக்குள் நுழைந்து இவ்வாறு சேதங்களை ஏற்படுத்துகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததுடன், ஊருக்குள் யானைகள் புகாதவாறு தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# சட்டத்தை மீறிய வர்த்தகர்களுக்கு 412,000 ரூபாய் அபராதம் விதிப்பு!

அக்கரைப்பற்று, மார்ச் 14

அம்பாறை மாவட்டத்தில் கடந்த பெப்ரவரி மாதம் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் 4 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ. றிஸ்லி தெரிவித்தார்.

கூடுதலான விலைக்கு பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து அம்பாறை, தெஹியத்தக்கண்டி, பொத்துவில், அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே. எம். ஏ. டக்ளஸின் ஆலோசனைக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தலைமையில், பாவனையாளர் அலுவலகல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டனர்.

கடந்த பெப்ரவரி மாதம் மேற்கொள்ளப்பட்ட 63 சுற்றி வளைப்புகளில், 51 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டன. இவர்களுக்கு நீதிமன்றங்களால் 04 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பனை செய்தல், நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருள்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருள்கள் மற்றும் தரமற்ற பொருள்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கெதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மூடப்பட்ட கேணியை மீண்டும் தோண்ட முடிவு

அட்டாளைச்சேனை, மாரச் 14

அட்டாளைச்சேனை - திராய்க்கேணி தமிழ்க் கிராமத்தில் சர்ச்சைக்குரிய மண் நிரப்பு விவகாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த பொதுமக்கள், அந்தஇடத்தை மீண்டும் தோண்டி, தீர்த்தக்கேணி அமைக்கவேண்டுமென தீர்மானம் எடுத்துள்ளனர்.

இந்தத் தீர்மானத்தை எழுத்து வடிவில் 3 நாள் காலஅவகாசம் கேட்ட அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் பொது மக்கள் கையளித்துள்ளனர்.

இந்தக் காணியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கும் அருகிலுள்ள சலவைத் தொழிலாளர் கட்டடத்தை புனரமைத்துத் தரவுமே அந்தக் காணியை மண்



போட்டு நிரப்பியதாக அட்டாளைச்சேனை தவிசாளர் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இருந்தபோதிலும் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு மக்கள் இணங்கவில்லை. மாறாக திராய்க்கேணியின் இருப்புக்கு காரணமாக அமைந்த கேணியை மீண்டும் தோண்டி, தீர்த்தக்கேணி அமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஈபிள் கோபுரம் தாக்கப்படும் காட்சியுடன் போலி வீடியோ!

## ஐரோப்பாவின் கவனத்தை ஈர்க்க உக்ரைனின் முயற்சி

பாரிஸ், மார்ச் 14

பாரிஸ் நகரம் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகுவது போன்ற "டம்மி" காட்சிகள் அடங்கிய வீடியோ ஒன்றை உக்ரைன் வெளியிட்டிருக்கிறது. உக்ரைனின் பாராளுமன்றமாகிய ராடா வெள்ளியன்று தனது ருவீற்றர் தளத்தில் வெளியிட்ட அந்தக் காணொலி உலகெங்கும் சமூகவலைத் தளங்களில் வைரலாகப் பரவியுள்ளது.

பதற்றத்தை ஏற்படுத்தும் அந்த வீடியோ உக்ரைனின் நிலைமை மீது ஐரோப்பாவின் கவனத்தை ஈர்க்கும் விதமாக உள்ளது.

பாரிஸ் நகரம் மீது போர் விமானங்கள் குறுக்கும் மறுக்குமாகப் பறக்கின்றன.

இளம் பெண் ஒருவர் ஈபிள் கோபுரம் முன் பாகப் படம் ஒன்றை எடுக்கிறார். சிறிது நேரத்தில் கோபுரத்தைக் குண்டுகள் தாக்குகின்றன. இன்னொரு காட்சியில் பாரிஸ் ஒபேரா அரங்கை சூழவுள்ள பகுதிகளைக் குண்டுகள் தாக்குகின்றன. பின்னணியில் பெண் ஒருவர் பிரெஞ்சு மொழியில் ஏதோ பேசுகிறார். அவரது குரல் குழந்தைகளின் அழுகுரல்களால் சூழப்படுகிறது.

"இது உங்களுக்குக் கவலையளிக்கவில்லையா?" பாரிஸில் உள்ள புகழ்பெற்ற ஈபிள் கோபுரம் அல்லது பெர்லினில் உள்ள பிரண்டன்பேர்க் கதவு மீது இடைவிடாத ரஷ்யக் குண்டு வீச்சு நிகழ்ந்தால் அது உங்களுக்குக் கவலையளிக்காது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இன்று உக்ரைன், நாளை,



அது ஐரோப்பா முழுவதும் நடக்கும். ரஷ்யா நிறுத்தாது".

-இவ்வாறு ஐரோப்பாவை நோக்கிக் கேள்விகளை எழுப்புகிறது உக்ரைன் பாராளுமன்றத்தின் வீடியோ.

உக்ரைன் மீது அதிபர் புடினால் கடந்த பெப்ரவரி 24 அன்று தொடங்கப்பட்ட படையெடுப்பு தலைநகர் கீவ் வரை முன் னேறியுள்ளது. தலைநகரம் ரஷ்யப்படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது. மிகப்பெரும் மனிதப் பேரவலம் அங்கு தோன்றியுள்ளது. ரஷ்யாவின் வான் தாக்குதல்களைத் தடுப்பதற்காக நாட்டுக்கு மேலேவான் பறப்புத் தடை வலயம் ஒன்றை அறிவிக்குமாறு உக்ரைன் மன்றாடிக்கேட்டு வருகிறது. அவ்வாறு செய்வது போரில் நேட்டோவின் நேரடியான தலையீடாக மாறிவிடும். அது மூன்றாம் உலகப் போருக்கு வழி வகுத்துவிடும் என்று கூறி அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் உக்ரைனின் கோரிக்கையை நிராகரித்து விட்டன.

இந்தப் பின்னணியிலேயே விரைந்து உதவி கோரும் விதமாக இவ்வாறு ஒரு வீடியோவை உக்ரைன் நாடாளுமன்றம் வெளியிட்டிருக்கிறது.

உக்ரைனின் தலைநகர் உட்பட பல பகுதிகளின் மீதும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை முதல் ரஷ்யப் படைகள் தீவிரதாக்குதல்களை ஆரம்பித்துள்ளன. உக்ரைனின் மேற்குப் பகுதியில் - போலந்து எல்லைக்கு நெருக்க மாக அமைந்துள்ள லிவிவ் பிராந்தியத்தில் அமெரிக்கா உட்பட வெளிநாட்டுப் படையினர் இணைந்த இராணுவப் பயிற்சி மையத் தின் மீது நேற்று காலை சுமார் எட்டு ஏவுகணைகள் தாக்கியுள்ளன. சேதவிவரங்கள் எதுவும் தெரிய வரவில்லை.

இந்தப் பகுதி ஊடாகவே பெரும் எடுப்பில் அகதிகள் போலந்துக்குள் வெளியேறுகின்றனர். உக்ரைனுக்கான அமெரிக்க போர்த் தளபாட உதவிகளும் அந்த வழியூடாகவே வழங்கப்படுகின்றன. அமெரிக் காவின் ஆயுத விநியோகங்கள் போர் இலக்குகளாகக் கருதப்பட்டு அதன் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷ்யாஎச்சரிக்கை விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ரஷ்யாவுடனான மோதலில் 1,300 படையினர் மரணம்!

### உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு

கீவ், மார்ச்

ரஷ்யாவுடனான மோதலில் இதுவரையில் 1,300 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஷெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சுமார் 600 ரஷ்ய படையினர் உக்ரைனிடம் சரணடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் உக்ரனின் கியிவ் பகுதியிலுள்ள இராணுவ விமான நிலையத்தின் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் சுமார் 13 ஆயிரம் பேர் நேற்று மனிதாபிமான அடிப்படையில் வெளியேற்றப்பட்டதாக உக்ரைன் துணை பிரதமர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைன் வான் பரப்பில் விமானங்கள் பறப்பதற்கு தடைவிதிக்க நேட்டோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி லண்டனில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. (அ)

## நெதர்லாந்துக்கான அமெ. தூதுவராக இந்திய பெண்

அம்ஸ்ரடாம், மார்ச் 14

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தன்னுடைய நிர்வாகத்தில் இந்திய வம்சாவளியினருக்கு பெரும் பங்களித்து வருகிறார். அந்த வகையில் அமெரிக்க அரசின் பல்வேறு அதிகாரமிக்க பதவிகளை இந்திய வம்சாவளியினர் வகித்து வருகின்றனர். அந்த வரிசையில் நெதர்லாந்துக்கான அமெரிக்க தூதுவராக இந்திய பெண்ணை ஜோ பைடன் நியமித்துள் ளார். அவர் காஷ்மீரில் இருந்து அமெரிக்காவுக்கு குடி பெயர்ந்தவரும், அமெரிக்காவின் பிரபல அரசியல் செயற் பாட்டாளருமான ஷெபாலி ரஸ்தான் துகல் (வயது 50) ஆவார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், "2 பிள்ளைகளுக்கு தாயான துகல், அனுபவம் வாய்ந்த அரசியல் செயற்பாட்டாளர், பெண்கள் உரிமைகளுக்கான சட்டத்தரணி மற்றும் மனித உரிமை ஆர்வலர் என பன்முகங்களை கொண்டவர். இவர் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா நிர்வாகத்தில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்" என கூறப்பட்டுள்ளது.

## உக்ரைன் தலைநகர் அருகே குழந்தை உட்பட 7 பேர் ரஷ்ய ராணுவத்தின் தாக்குதலில் பலி!

கீவ், மார்ச் 14



உக்ரைன் தலைநகர் கியவ் அருகே உள்ள பெரேமோஹா கிராமத்தில் இருந்து பெண்கள் மற்றும் குழந்தைகளுடன் வந்த வாகனத் தொடரணி மீது ரஷ்ய படைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஏழு பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை ரஷ்யப் படைகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் குழந்தை ஒன்றும் அடங்குவதாக உக்ரேனிய உளவுத்துறை தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, உக்ரைனில் ரஷ்ய படையினரால் முற்றுகையிடப்பட்ட நகரங்களில் இருந்து பொதுமக்களை வெளியேற்றுவதற்கான புதிய முயற்சிகள் தொடர்ச்சியான ஷெல் தாக்குதலால் சிக்கலாகி வருவதாக உக்ரேனிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேரியோபோல், சுமி, தலைநகர் கீய்வுக்கு வெளியே உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களில் இருந்து மனிதாபிமான பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் கீய்வ் மற்றும் பிற நகரங்களைச் சுற்றி சண்டைகள் தொடர்வதை அடுத்து, அவற்றில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி தப்பித்து வருகின்றனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை மட்டும் சுமார் 13 ஆயிரம் உக்ரேனியர்கள் மனிதாபிமான பாதைகள் வழியாக வெளியேற்றப்பட்டனர். ஆனால் அதில் ஒருவர் கூட கடும் தாக்குதலை சந்திக்கும் மேரியோபோல் நகரில் இருந்து வரவில்லை என உக்ரேனிய துணைப் பிரதமர் இரினா வெரேஷ்சுக் கூறினார்.

இரண்டு வாரமாக முற்றுகைக்குள் இருக்கும் மேரியோபோல் நகரின் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. உணவு, தண்ணீர், மின்சார வசதிகள் குறைவாகவே உள்ளன என ஐ.நாவும் கவலை வெளியிட்டுள்ளது.

இந்நகரில் உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கான மருந்துகள் விரைவில் தீர்ந்து வருகின்றன, மருத்துவமனைகள் ஓரளவு மட்டுமே செயல்படுகின்றன, உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை உள்ளது என மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது.

## போருக்கு மத்தியில் ரஷ்யா - உக்ரைன் தலைவர்கள் சந்தித்து பேசும் வாய்ப்பு!

மொஸ்கோ, மார்ச் 14

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கிக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கான சந்தர்ப்பங்களை நிராகரிக்க முடியாது என ரஷ்ய ஜனாதிபதி மாளிகையான கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா - உக்ரைன் உக்கிர மோதல் நேற்று 17 ஆவது நாளாகத் தொடரும் நிலையில் இரு தலைவர்களும் நேரடியாகப் பேசுவதற்கான சாத்தியங்களை மறுக்க முடியாது என அவர் கூறினார்.

ஆனால் முதலில் இரு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சர்கள் மட்டத்தில் இந்தப் பேச்சுக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இரு நாடுகளின் ஜனாதிபதிகள் கூடுவது வெறும் பேச்சுக்கானதாக இருக்க முடியாது. தீர்க்கமான முடிவுகள் எடுக்க கூடிய வகையில் முன்கூட்டிய நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும் டிமிட்ரி பெஸ்கோவ் கூறினார்.

இதேவேளை, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை நேரடி பேச்சுவார்த்தைக்கு வருமாறு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நேற்று அழைப்பு விடுத்தார். அத்துடன், ரஷ்யாவின் படையெடுப்பை முடிவுக்கு கொண்டு வருமாறும் அவர் வலியுறுத்தினார்.

அதே நேரத்தில் உக்ரைனுக்கான இராணுவ உதவியை அதிகரிக்க மேற்கு நாடுகளுக்கு ஜெலென்ஸ்கி அழைப்பு விடுத்தார்.

உக்ரேனிய தலைநகரில் உள்ள தனது அலுவலகத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய ஜெலென்ஸ்கி, உக்ரைன் மீதான புடினின் இராணுவத் தாக்குதல் வெற்றி பெற்றால் ரஷ்யா ஐரோப்பா முழுவதும் முன்னேறக்கூடும் என்று மேற்கு நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தார். (அ)

## அந்தமான் - நிகோபார் தீவுகளில் நிலநடுக்கம்!

அந்தமான் - நிகோபார் தீவுகளில் உள்ள திக்லிபூர் பகுதியில் நேற்று காலை 8.58 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக நில அதிர்வுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.1 அலகுகளாக பதிவானது. திக்லிபூரில் இருந்து தென் கிழக்கே 225 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாம் களமிறங்கினால் 3 ஆம் உலகப் போர்!

### அமெரிக்கா எச்சரிக்கை

நியூயோர்க், மார்ச் 14

உக்ரைன் போரில், ரஷ்ய படைகளுக்கு எதிராக அமெரிக்க படைகள் போரிடுமாயின், அது மூன்றாம் உலகப் போரைக் குறிக்கும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்துள்ளார். ஆகவே உக்ரைனில், ரஷ்யாவுக்கு எதிரான போரில் தமது நாடு நேரடியாக தலையிடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனில் அமெரிக்காவின் உயிரியல் ஆயுதங்கள் கையாளப்படுவதாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்யா குற்றம் சாட்டிய நிலையில், ஜோ பைடன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நேட்டோ பிரதேசத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் ஒன்றுபட்ட நேட்டோவின் முழு பலத்துடன் பாதுகாப்போம் என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆகவே உக்ரைனில் இருந்து ரஷ்யாவுக்கு எதிராக போரிட மாட்டோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறினார். நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நேரடி மோதல், மூன்றாம் உலகப் போரைக் குறிக்கும் என்றும் அவர் எச்சரித்தார். (அ)



# இந்தியாவுடனான டெஸ்ட்: இலங்கை தடுமாற்றம்!

*பெங்களூர், மார்ச் 14*

பகலிரவு போட்டியாக நடக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு 447 ஓட்டங்களை இந்திய அணி இலக்காக நிர்ணயித்துள்ளது.

இந்தியா, இலங்கை இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 252 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து, முதல் இனிங்ஸை ஆடிய இலங்கை அணி முதல் நாள் ஆட்டநேர முடிவில் 30 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 86 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

டிக்வெல்ல 13 ஓட்டங்களுடனும், எம்புல்தெனிய ஓட்டம் எதுவும் பெறாமலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் இரண்டாவது நாள் ஆட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடந்தது. இந்த ஆட்டத்தில் 35 பந்துகளில் மீதமுள்ள விக்கெட்களை இந்திய அணி கைப்பற்றியது. டிக்வெல்ல 21 ஓட்டங்களை எடுத்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சில் பும்ரா 5 விக்கெட்களையும், ரவிச்சந்திரன் அஸ்வின் மற்றும் முகமது ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், அக்சர் பட்டேல் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இலங்கை அணி 109 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்ததையடுத்து, இந்திய அணி 143 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இனிங்ஸை தொடங்கியது. இந்திய அணி வீரர்கள் அனைவரும் வேகமாக ஓட்டங்களை குவித்தனர். இதனால் ஒருபுறம் விக்கெட்கள் சரிந்தாலும் மற்றொருபுறம் ஓட்டங்களும் உயர்ந்தன. இரண்டாவது இனிங்ஸில் இந்திய அணி 303 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்களை இழந்திருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது இந்திய அணி.

இதன்மூலம் இலங்கை அணிக்கு இலக்காக 447 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இந்திய அணி தரப்பில் அதிகபட்சமாக ஸ்ரேயாஸ் ஐயர் 67, ரிஷப் பந்த் 50, ரோஹித் சர்மா 46, விஹாரி 35 ஓட்டங்கள் எடுத்தனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் ஜெயவிக்கிரம 4, லசித் 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடி வரும் இலங்கை அணி முதல் ஓவரிலேயே விக்கெட்டை பறிகொடுத்தது.

நேற்று ஆட்டநேர முடிவில் 28 ஓட்டங்களை எடுத்திருந்தது. திமுத் கருணாரத்ன 10, குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

# இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் வெளியேறினார் ஓசாகா!




*கலிபோர்னியா, மார்ச் 14*

கலிபோர்னியாவில் நடைபெற்று வரும் இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் பங்குற்றிய நயோமி ஒசாகா முற்றிலும் எதிர்பாராதவிதமாக 2ஆம் சுற்றில் தோல்வி அடைந்து கவலையும் குழப்பமும் அடைந்தவராக கண்ணீருடன் வெளியேறினார்.

நான்கு தடவைகள் கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் சம்பியனான ஒசாகா, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற 3ஆம் சுற்று மகளிர் ஒற்றையர் போட்டியில் ரஷ்ய வீராங்கனை வெரோனிக்கா கியூடர்மெட்டோவாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார்.

ஒசாகாவை பிரமிக்கச் செய்யும் வகையில் முதலாவது செற்றில் அற்புதமாக விளையாடிய கியூடர் மெட்டோவா ஒரு புள்ளியைத்தானும் விட்டுக் கொடுக்காமல் 6 - 0 என்ற புள்ளிகள் அடிப்படையில் மிக இலகுவாக வெற்றி பெற்றார்.

இரண்டாவது செற்றில் ஒசாகாவிடம் சிறிய சவாலை எதிர்கொண்ட கியூடர்மெட்டோவா ஆட்டத்தின் பிற்பகுதியில் மிகத் திறமையாக விளையாடி 6 - 4 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்று ஒசாகாவை வெளியேற்றி 4ஆம் சுற்றுக்கு முன்னேறினார்.

கடந்த ஒரு வருடத்தில் மகளிருக்கான ஒற்றையர் ரென்னிஸ் தரவரிசையில் பின்னோக்கி சென்று கொண்டிருக்கும் ஒசாகா தரவரிசையில் 78ஆம் நிலையில் இருந்தவாறு இந்தியன் வெல்ஸ் போட்டியில் கியூடர்மெட்டோவாவை எதிர்கொண்டார். இந்தத் தோல்வியுடன் அவர் மேலும் தரவரிசையில் பின்னடைவை சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியன் வெல்ஸ் ரென்னிஸ் போராடி வென்றார் நடால்!

*கலிபோர்னியா, மார்ச் 14*

கலிபோர்னியாவில் நடைபெற்று வரும் இந்தியன்ஸ் வெல்ஸ் ரென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ரபேல் நடால் கடும் சவாலான போட்டியில் வெற்றி பெற்றார்.

அமெரிக்க வீரரும் ஆண்களுக்கான உலக ரென்னிஸ் தரவரிசையில் 38ஆம் இடத்திலுள்ள வருமான செபஸ்ரியன் கோர்டாவிடம் கடும் சவாலை எதிர்கொண்ட நடால் 2 - 1 என்ற செற்கள் அடிப்படையில் வெற்றிபெற்று 3ஆம் சுற்றுக்கு முன்னேறினார்.

உலக தரவரிசையில் 4ஆம் இடத்திலுள்ள நடால் முதலாவது செற்றில் மிக இலகுவாக 6 - 2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டினார்.

ஆனால், அடுத்த செற்றில் பதிலடி கொடுத்த கோர்டா, முற்றிலும் எதிர்பாராத விதமாக 6 - 1 என வெற்றியீட்டி நடாலுக்கு அதிர்ச்சி கொடுத்தார்.

சமநிலை முறிப்புவரை நீடித்த தீர்மானமிக்க கடைசி செற்றில் கடும் சவாலை எதிர்கொண்ட நடால் 7 (7) - 6 (3) வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# 141 ஓட்டங்களால் ஆஸியிடம் வீழ்ந்தது நியூசிலாந்து மகளிர்!




*வெலிங்டன், மார்ச் 14*

நியூசிலாந்துக்கு எதிராக வெலிங்டனில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் மத்திய வரிசை துடுப்பாட்ட வீராங்கனைகளின் பங்களிப்புடன் 141 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா பெரு வெற்றி பெற்றது. இதன் மூலம் இதுவரை தான் விளையாடிய 3 போட்டிகளிலும் அவுஸ்திரேலியா வெற்றியீட்டி 6 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கின்றது.

ஒன்றை ஒன்று ஒரு தடவை லீக் சுற்றில் எதிர்த்தாடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள 8 நாடுகளுக்கு இடையிலான 12ஆவது மகளிர் உலக கிண்ணத் தொடரில் 11 போட்டிகள் இதுவரை நிறைவடைந்துள்ளன.

வெலிங்டன் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 269 ஓட்டங்களைக் குவித்தது.

30ஆவது ஓவரில் அவுஸ்திரேலியாவின் 4ஆவது விக்கெட் வீழ்ந்தபோது அதன் மொத்த எண்ணிக்கை 113 ஓட்டங்களாக இருந்தது. மத்திய வரிசையில் எலிஸ் பெரி, தஹ்லியா மெக்ரா ஆகியோர் குவித்த அரைச் சதங்கள் அவுஸ்திரேலியாவை பலம்வாய்ந்த நிலையை அடையச் செய்தது.

பெரி 68 ஓட்டங்களையும் மெக்ரா 57 ஓட்டங்களையும் பெற்றதுடன் இருவரும் 5ஆவது விககெட்டில் 101 ஓட்டங்களைப் பகிர்ந்து அவுஸ்திரேலியா 200 ஓட்டங்களைக் கடக்க உதவினர். இவர்களை விட ஆரம்ப வீராங்கனை ரஷெல் ஹேய்ன்ஸ் 30 ஓட்டங்ளையும் மத்திய வரிசையில் பெத் மூனி 30 ஓட்டங்களையும் ஏஷ்லி கார்ட்னர் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும் பெற்றனர்.

நியூசிலாந்து பந்துவீச்சில் லீ தஹுஹு 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

270 ஓட்டங்கள் என்ற சற்று கடினமான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, எதிரணியின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல் சகல விக்கெட்களையும் இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அமி செட்டர்த்வெய்ட் மாத்திரமே 44 ஓட்டங்களைப் பெற்றார். இவரை விட லீ துஹுஹு (23), கேட்டி மார்ட்டின் (19), சுஸி பேட்ஸ் (16) ஆகிய மூவரே இரட்டை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றனர். (ஐ)



ஈழநாடு



# மக்களின் அமைதி நாட்டுக்கு ஆபத்து!

## ஜே. வி. பி. தலைவர் சொல்கிறார்

இரத்தினபுரி, மார்ச் 14

**நாட்டை மிகவும் மோசமான முறையில் நிர்வகித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை துரத்தியடிப்பதற்கான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு தலைமை வகிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி தயாராக இருக்கிறது. இனிமேலும் மக்கள் அமைதியாக இருப்பது நாட்டுக்கு ஆபத்தாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இரத்தினபுரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே இதனை அவர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையில் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்களாகக் காணப்படுகிறது. எனினும் இறக்குமதி செலவு 20 பில்லியன் டொலர்களாகும். இவ்வாறான ஏற்றுமதி - இறக்குமதி இடைவெளிக்கு மத்தியில் டொலரின் பெறுமதி 270 ஆக உயர்வடைந்துள்ளது. இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இலங்கை தற்போது பாரிய பொருளாதார அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளது.

சிம்பாவே மற்றும் லெபனான் போன்ற நாடுகள் ஆரம்பத்தில் இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து




பின்னர் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை மீறிச் சென்றபோது , அங்குள்ள இராணுவத்தினருக்குக்கூட வெளிநாடுகளிலிருந்து உணவை வழங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனினும் இலங்கை இன்னும் அந்த மட்டத்திற்குச் செல்லவில்லை. சரியான தீர்மானங்களை எடுக்காவிட்டால் அந்த நாடுகளில் ஏற்பட்ட நிலைமையே இலங்கையிலும் ஏற்படும்.

நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கி ஆளுனர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரால் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல்கள் அவர்களின் வீட்டு நிலத்தை சுத்தப்படுத்த உதவுமே தவிர, பொருளாதார நெருக்கடிகளுக்கு எந்தவகையிலும் தீர்வாக அமையாது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதிக்கு பின்னர் நிதி அமைச்சர் இதுவரையிலும் பாராளுமன்றத்தில் உரையாற்றவில்லை. இவ்வாறு மிகவும் மோசமான முறையில் நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தை துரத்தியடிப்பதற்கான போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். இது ராஜபக்ஷ குடும்பத்தின் நாடு அல்ல. பஸில் ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவின் குடும்பத்தினர் அனைவரும் அமெரிக்காவிலேயே உள்ளனர். இவர்கள் தமது தொழிலுக்காக இங்கு தங்கியுள்ளனர். தற்போது எம்மிடம் காணப்படும் கைவிட முடியாத பொறுப்பு இவர்களிடமிருந்து நாட்டை மீட்பதாகும் -என்றார்.

# டீசல் நிவாரணத்தை வழங்குமாறு கோரிக்கை

கொழும்பு, மார்ச். 14

நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் நூற்றுக்கு 10 சதவீதமானே பஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளன. எனவே பஸ் போக்குவரத்து வழமைக்கு திரும்புவதற்கு டீசல் நிவாரணத்தை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று அகில இலங்கை தனியார் பேருந்து சங்க சம்மேளன செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், "அரசாங்கத்தால் டீசல் விலை அதிகரிக்கப்பட்டிருந்தாலும் நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை நூற்றுக்கு 80 சதவீதமான பஸ்களே சேவையில் ஈடுபட்டன.

நேற்றைய தினம் தினம் நூற்றுக்கு 10 சதவீதமான பஸ்களே சேவையில் ஈடுபட்டன. பஸ் போக்குவரத்தை வழமைக்கு கொண்டுவருவதற்கு பஸ் கட்டணத்தை அதிகரிப்பது என்பது இரண்டாவது தீர்வாகும். முதலில் அரசாங்கத்திடம் நாங்கள் டீசல் நிவாரணத்தையே கோரி நிற்கின்றோம்.

டீசல் நிவாரணம் வழங்கப்படவில்லையாயின் அடுத்தக்கட்ட நடவடிக்கையாக பஸ் கட்டண அதிகரிப்புக்கு செல்ல நேரிடும். பஸ் கட்டணத்தை நூற்றுக்கு 30 சதவீதமாக அதிகரிப்பது அவசியமாகும்.

தற்போது 17 ரூபாயாகக் காணப்படும் ஆகக் குறைந்த பஸ் கட்டணமானது 30 ரூபாய் வரை அதிகரிக்கப்பட வேண்டும். இல்லையாயின் பஸ் துறையை எம்மால் முன்னெடுத்து செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

அமைச்சரால் அவர் நினைத்ததைபோன்று பஸ் கட்டணத்தை அதிகரிக்க முடியுயாது. அதற்கு இணங்கவும் நாம் தயாராக இல்லை.

இந்த அரசாங்கத்துக்கும் அமைச்சருக்கும் ஆதரவாக செயற்படும் பஸ் சங்கங்கள் மட்டுமே போக்குவரத்து அமைச்சரின் தீர்மானங்களுக்கு இணக்கம் தெரிவிப்பர். எமது சங்கம் அவ்வாறான சங்கம் இல்லை" என்றும் தெரிவித்தார். (கே)

# தனிமைப்படுத்தலை மீறிய 1,071 பேருக்கு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 14

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1071 பேருக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் செயல்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்றைய தினம் 645 பொலிஸார் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது 2,981 மோட்டார் சைக்கிள்களும் 1,821 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அத்துடன், 6,328 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 1,071 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கே)

# இரும்பு கம்பிகளின் விலை தொன்னுக்கு ரூ. 38,000 உயர்வு

கொழும்பு, மார்ச். 14

விற்பனை நிலையங்களில் விற்கப்படும் இரும்புக் கம்பிகளின் விலையும் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது. ஒரு தொன் இரும்பு கம்பியின் விலை 38,000 ரூபாயால் அதிகரித்துள்ளது.

கடந்த 3 நாட்களுக்குள் இவ்வாறு விலை அதிகரித்துள்ளன என்று வர்த்தகர்கள் ஊடாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னர் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு தொன் இரும்பு கம்பியின் விலை தற்போது 292,500 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இதற்கமைய 10 மில்லி மீற்றர் இரும்பு கம்பி ஒன்று 1,040 ரூபாய்க்கும், 12 மில்லி மீற்றர் கம்பி 1,500 ரூபாய்க்கும், 16 மில்லிமீற்றர் கம்பி ஒன்று 1,725 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் வீழ்ச்சி காரணமாக மூலப்பொருட்களின் விலை அதிகரித்துள்ளதோடு எதிர்காலத்தில் குறித்த கம்பிகளின் விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என உற்பத்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, சந்தையில் சில சீமெந்து நிறுவனங்கள் தங்களது உற்பத்திகளுக்கான விலையை அதிகரித்துள்ளன.

இதற்கமைய சுமார் 1,500 ரூபாயாக காணப்பட்ட ஒரு மூடை சீமெந்து தற்போது 1,850 முதல் 1,900 ரூபாயாக விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மனைவி கொலை; கணவன் கைதானார்

கொழும்பு, மார்ச் 14

கேகாலை ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹேனே பொலை பிரதேசத்தில், குடும்ப சண்டை காரணமாக பெண்ணொருவர் தனது கணவரால் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பத்தம்பிட்டி ரம்புக்கனை பிரதேசத்தை சேர்ந்த 62 வயது பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 65 வயது நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இது தொடர்பில் ரம்புக்கனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# எரிபொருளுக்கு விலையேற்றியிராவிடின் 2600 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கும்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, மார்ச் 14

எரிபொருள் விலையை அதிகரித்திருக்காவிட்டால் இந்த மாதத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2ஆயிரத்து 600 கோடி ரூபாய் நட்டமடைந்திருக்கும். நாளாந்த எரிபொருள் நுகர்வு வீதம் அதிகரித்துள்ளமையும் இதற்கான காரணமாகும். எவ்வாறிருப்பினும் உலக சந்தையில் மீண்டும் எரிபொருள் விலை குறைவடையும்போது அதன் பயனை நாட்டு மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நிதி அமைச்சரிடம் கோரியுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரிக்க தீர்மானித்தமைக்கான காரணம் குறித்து தெளிவுபடுத்துகையில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பெற்றோலிய கூட்டுத்தாபனம் 2019 இல் 3,300 மில்லியன் டொலர் கடன் சுமையைக் கொண்டிருந்தது. எனினும் 2020 இல் சுமார் 2,000 - 3,000 மில்லியன் ரூபாய் இலாபமீட்டக் கூடியதாகக் காணப்பட்டது. வ்வாறிருப்பினும் கடந்த ஆண்டு பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 91 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

இதேபோன்று இந்த ஆண்டு ஜனவரியில் 7 பில்லியன் ரூபாயாலும், பெப்ரவரியில் 12.6 பில்லியன் ரூபாயாலும் நட்டமடைந்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு எரிபொருள் விலை சடுதியாக அதிகரித்துள்ளமையே இதற்கான காரணமாகும். ரஷ்ய - உக்ரைன் மோதலால் இந்த நிலைமை இருமடங்காக அதிகரித்துள்ளது. இம்மாதத்தில் நாளொன்றுக்கு சுமார் 800 - 900 மில்லியன் ரூபாய் நட்டத்தை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ளது.

இதே நிலைமை தொடர்ந்தால் இந்த மாதத்தில் மாத்திரம் 26 பில்லியன் ரூபாய் நட்டத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று மதிப்பிடப்பட்டிருந்தது. தற்போது நட்டத்திற்கு மத்தியிலும் மக்களுக்கு நிவாரண விலையில் எரிபொருள் வழங்கப்பட்டாலும், எதிர்காலத்தில் தற்போது ஏற்படும் நஷ்டம் ஒன்று சேர்ந்து சாதாரண மக்கள் மீதே சுமத்தப்படும்.

நாட்டில் நாளொன்றுக்கான டீசல் நுகர்வு சுமார் 5,300 - 5,500 மெட்ரிக் தொன்களாகும். எனினும் கடந்த பெப்ரவரி மற்றும் இம்மாதத்தின் இருவரையான காலப்பகுதியில் 8,000 மெட்ரிக் தொன் வரை அதிகரித்தது. இந்த மாதத்தில் கடந்த சில தினங்களில் நாளொன்றுக்கான டீசல் நுகர்வு 10,000 மெட்ரிக் தொன் வரை உயர்வடைந்தது. வழமையாக 3,300 மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்ட பெற்றோல் நுகர்வு தற்போது 4,200 மெட்ரின் தொன் வரை அதிகரித்துள்ளது. நுகர்வோர் தேவைக்கு அதிகமாக இவற்றை கொள்வனவு செய்தமையே இதற்கான காரணமாகும் - என்றார். (ஐ)

## ஜனாதிபதியுடனான...

த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் புளொட் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் “ஈழநாடு” அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மேலும், ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் ரெலோ கட்சியின் நிலைப்பாடும் சரியானதே. ஆனால், எமக்கான தீர்வு குறித்துப் பேசுவதானால் ஜனாதிபதியுடனேயே பேச வேண்டும். எனினும், நாளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்துப் பேசவுள்ளோம். இந்தப் பேச்சின் போதே எமது முடிவை எடுப்போம் - என்றார்.

தற்போதைய நிலையில், ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவது சாதுரியமானது அல்ல என்று கூறப்படும் கருத்துக்கள் தொடர்பில் அவரிடம் வினவியபோது,

இந்தியா, ஐ. நா. மனித உரிமைகள் பேரவை, ஐரோப்பிய நாடுகள் என்பவை அரசியல் தீர்வுக்காக அரசாங்கத்துடன் பேசுமாறுதானே கூறுகின்றன. எமக்கான தீர்வை நாம் அரசாங்கத்துடன் பேசித்தானே பெறமுடியும். இவ்வாறான நிலையில் நாம் ஜனாதிபதியுடன் அல்லது அரசாங்கத்துடன்தானே பேசவேண்டும். எனவே, பேச்சை தவிர்க்கவேண்டும் என்பது என்னைப் பொறுத்தவரை பொருத்தமானது அல்ல.

மேலும், நாம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் விளைவுதான் இந்த சந்திப்பு. அப்போது நாம் ஜனாதிபதியை சந்திக்கக் கேட்டிருந்தோம். இரு வாரங்களுக்குள் சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும் என்று அப்போது எமக்கு உறுதியளிக்கப்பட்டது. இதன் விளைவுதான் இந்த சந்திப்பு என்று பதிலளித்தார்.

“போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பேச்சில் பங்கேற் அழைப்பில்லையே?”, என்று எழுப்பிய வினாவுக்கு “அது ஜனாதிபதியின் முடிவு. சிலவேளைகளில், அவர் மற்றக் கட்சிகளை தனியாக சந்தித்துப் பேசவும் கூடும் - என்றார். (ஐ)

## மீன்பிடி...

புடனும் மீனவர் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்துவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். எதிர்காலத்தில் மீனவர்களுக்கான உதவித் திட்டங்களை வழங்குதலை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் பாதிக்கப்பட்ட 600 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை யாழ். மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இம்முறை கச்சதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவை சிறப்பாக நடத்தியமைக்காக கடற்றொழில் அமைச்சர், யாழ். மாவட்ட செயலர் மற்றும் அதிகாரிகளுக்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா பாதிப்பு இலங்கை, இந்தியாவை மட்டும் பாதிக்கவில்லை. உலக நாடுகள் அனைத்தையும் பாதித்துள்ளது. பல்வேறு நாடுகளில் கொரோனா நோய் தாக்கத்தை ஏற்படுத்தி பல்வேறு பொருளாதார ரீதியான தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இலங்கையும் இந்தியாவும் ஒருவருக்கு ஒருவர் உதவி இந்த கொரோனாவிலிருந்து முன்னேறுவதற்கு செயல்பட்டதன் மூலம் நமது இலங்கை - இந்தியா உறவானது இதன்மூலம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

முதல் கட்டமாக யாழ்ப்பாண மீனவர்களுக்கான உதவித் திட்டத்தை வழங்கியுள்ளோம். மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் துணைத் தூதரகம் என்ற அடிப்படையிலும் இந்திய நாடு என்ற அடிப்படையிலும் அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். எதிர்காலத்தில் இந்திய அரசின் உதவித் திட்டங்கள் பன்மடங்கு அதிகரித்து பல்வேறு உதவிகளை வழங்குவோம். அத்துடன், உதவித் திட்டத்தை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம்.

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தில் மீன்பிடி சம்பந்தமான முதலீடுகளை செய்து, அதன் மூலம் இங்குள்ளவர்களுக்கு வருமானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம். அனைவரும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

எமது அரசாங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள கலாசார மத்திய நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது அத்தோடு கலாச்சார மத்திய நிலையத்தை இரண்டு நாடுகளும் இணைந்து எவ்வாறு நிர்வகிப்பது தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சுவுள்ளோம் - என்றார். (ஐ)

## மாகாண சபை...

அங்கிருந்து, ஏ -9 வீதி வழியாக - தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டு கழக மைதானத்தில் பேரணி நிறைவு பெற்றது. இதன்போது, யாழ்ப்பாணத்தில் கடந்த ஜனவரி 30ஆம் திகதி நடத்தப்பட்ட பேரணியின் இறுதியில் வாசிக்கப்பட்ட கிட்டுப் பூங்கா பிரகடனத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட செயலாளர் எஸ். தவபாலன் வாசித்தார். இதைத் தொடர்ந்து கட்சித் தலைவர்கள், முக்கியஸ்தர்களின் உரைகள் நடைபெற்றன.

13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த தினங்களில் வவுனியாவில் வாகனப் பேரணியையும் மக்கள் சந்திப்புக்களையும் முன்னெடுத்திருந்த நிலையிலேயே நேற்று இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை 13ஆம் திருத்தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைத்து தமிழ் மக்களும் பூரணமான ஆதரவை வழங்க வேண்டு என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதன்போது வலியுறுத்தினார்.

இந்தப் பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் கட்சியினது சட்ட ஆலோசகர் காண்டீபன், ஊடக பேச்சாளர் சுகாஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும் மக்கள் பலர் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## டீசலின்...

எனினும், இந்த விலையுயர்வு பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலுக்கு ஏற்பட்ட நட்டத்தை மட்டுமே ஈடுசெய்யும்.

டீசலுக்கு ஏற்பட் டுள்ள நட்டத்தை ஈடு செய்ய அதன் விலையை லீற்றருக்கு 120 ரூபாயால் உயர்த்தப்பட வேண்டும்.40 ஆயிரம் தொன் டீசலை இறக்குமதி செய்வதற்கு முன்னர் 320 கோடி டொலர் கள் செலவிடப்பட்டன. எனினும் உலக எரிபொருள் விலையேற்றம் காரணமாக 510 கோடி டொலர்களாக அது அதிகரித் துள்ளது என்றும் பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்தார். (ஐ)

## ஜோன். பொஸ்கோ...

புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின.

இந்தப் பரீட்சைக்கு ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலிருந்து 227 பேர் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். இதில், 151 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர்.

இதில், அதிகூடிய புள்ளிகளை சுதர்சன் அக்ஷரன் (193 புள்ளிகள்) என்ற மாணவன் பெற்றுள்ளார். (ஐ)

# காகித தட்டுப்பாடு எதிரொலி;
# பாடப் புத்தகங்கள் அச்சிடல் நிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 14

காகிதத் தட்டுப்பாடு காரணமாக பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடுவது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதாக அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் பதில் பொது முகாமையாளர் ரஞ்சித் தென்னகோன் தெரிவித்துள்ளார்.

பாடசாலை பாடப் புத்தகங்களின் 40 இலட்சம் பிரதிகளுக்கு சுமார் 3,000 மெற்றிக் தொன் தாள்கள் தேவைப்படுகின்றன என்று தெரிவித்த அவர், ஒரு மெட்ரிக் தொன் தாளின் விலை 2 இலட்சம் ரூபாயால் அதிகரித்துள்ளது.

பாடப் பாடப் புத்தகங்களை அச்சிடுவதே அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முக்கிய வருமானம். இதை இழந்தால் நிறுவனத்துக்கு சுமார் 120 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்.

முன்னதாக, அரச நிறுவனங்களுக்கு ஆவணங்களை வழங்குவதற்கு தேவையான கடதாசியைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் இரண்டு லொத்தர் சீட்டுக்கள் அச்சிடுவது முற்றாக நிறுத்தப்பட்டன என்றும் கூறினார். (ஐ)

## ரயில் கட்டணத்தையும் உயர்த்துமாறு கோரிக்கை!

கொழும்பு, மார்ச் 14

ரயில் கட்டணத்தை அதிகரிக்குமாறு மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பஸ் கட்டணத்திற்கு இணையாக, ரயில் கட் டணத்தை அதிகரிக்கு மாறு கோரிக்கை விடுத்துள்ளதாக திணைக்களத்தின் பொதுமுகாமை யாளர் தம்மிக ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்து அமைச் சிடமிருந்து ஆலோசனை பெற்று, தமது கோரிக்கையை நிதி அமைச்சிடம் முன்வைக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## இந்தியப்...

வருகை தரவுள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்தியத் தூதர் கோபால் பாக்லே ஆகியோர் அவரை வரவேற்கவுள்ளனர்.

“பிம்ஸ்ரெக்” எனப்படும் பல்துறை, தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி இலங்கை வருகிறார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பு வரத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அந்த திட்டம் மாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, மார்ச் 18ஆம் திகதி முதல் இரண்டு நாள் பயணமாக மஹிந்த யாழ்ப்பாணம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிடம் இலங்கை கடன்பெறுவதற்கான பல நிபந்தனைகளில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவது, இந்தியா முதலீடு செய்ய விரும்பும் பல திட்டங்களுக்கு அனுமதிப்பது போன்றன அடங்குமென தெரிவிக்கப்படுகிறது.

பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை இந்தியா மேலும் அபிவிருத்தி செய்யவுள்ளதாக தெரிய வருகிறது.

மேலும், பாதுகாப்பு தொடர்பான இரண்டு ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன. பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பரும், ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரர் என்று வர்ணிக்கப்படுபவருமான கௌதம் அதானி வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வந்திருந்தார். தனது தனி ஜெட் விமானத்தில் கொழும்பு வந்தார். அவர் பல திட்டங்களில் முதலீடு செய்ய உள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## இன்று 7 மணிநேர மின்வெட்டு அமுல்!

கொழும்பு, மார்ச் 14

இன்று திங்கட்கிழமை பகல் 5 மணி நேரமும், இரவு 2 மணி நேரமுமாக சுழற்சி முறையில் 7 மணி நேரம் மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப் பகுதியில் 5 மணி நேர மின்வெட்டு நடைமுறையாகும்.

மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் 2 மணி நேரமும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பேருந்து...

மையாளர் சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.

ஏனைய கட்டணத் திருத்தம் தொடர்பான முடிவுகள் இன்றயை அமைச்சரவைக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட பின்னர் அறிவிக்கப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## புலமைப்பரிசில்...

பெறுபேறுகள் வெளியாகவில்லை.

இந்நிலையில், நேற்றிரவு புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின. பரீட்சை முடிவுகளை https://www.doenets.lk/examresults இணையத்தளம் அல்லது https://www.exams.gov.lk/examresults இணையத்தளம் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## டெங்குக்கு...

2021ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின. இதில், வசந்தன் அஜய் யாழ். மாவட்டத்துக்கான வெட்டுப் புள்ளியான 148புள்ளிகளுக்கு மேல் பெற்று - 155 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலத்தை சேர்ந்தவரான குறித்த மாணவன் டெங்கு தொற்றால் கடந்த மாதம் 14ஆம் திகதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொக்குவில்...

பரீட்சைகளின் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகின. இதில், கிடைக்கப்பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கொக்குவில் இந்ததுக் கல்லூரி மாணவனான த. கஜலக்ஷன் பெற்ற 198 புள்ளிகளே அதிகூடிய புள்ளிகளாகும்.

இதேவேளை, அச்சுவேலி ஆரம்ப பாடசாலை மாணவன் வி.சுபானன் 192 புள்ளிகளைப் பெற்றுள்ளார். அத்துடன், அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையில் ரி.கபிஷனா 172 புள்ளிகளையும் எஸ்.சந்தோஷ் 164 புள்ளிகளையும் ஆர்த்திகா 155 புள்ளிகளையும் பி. சாயுரி 151 புள்ளிகளையும் யூ.தராங்கனி 151 புள்ளிகளையும் அச்சயன் 150 புள்ளிகளையும் மதுமிலா 148 புள்ளிகளையும் பெற்றுள்ளனர்.

ஈழநாடு
Eelanadu

# அமெரிக்க ஒப்பந்தத்தில் பஸில் ஒப்பமிட தீர்மானம்!

## விமல் வீரவன்ஸ தகவல்



கொழும்பு, மார்ச் 14

அமெரிக்காவின் மிலேனியம் சவால் கூட்டுத்தாபன (எம். சி. சி) உடன்படிக் கையை மேற்கொள்வதற்கான பேச்சுக் களை மீண்டும் ஆரம்பிப்பதற்காகவே அந்நாட் டின் இராஜாங்க திணைக்கள அரசியல் விவகாரங்களுக் கான வெளியுறவுத்துறை செயலர் விக்ரோறியா நுலாண்ட் இலங்கைக்கு வரவுள்ளார் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரி வித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளியாகும் நாளி தழ் ஒன்றுக்கு அளித்த நேர்காணலி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும்,

நிதி அமைச்சர் நாட்டின் பொருளாதார நிலைமைகள் மோசமடைந்து எவ் வாறாவது நாட்டைக் காப்பாற்றுங் கள் என்று பொதுமக்கள் கோரும் தருண மொன்று ஏற்பட வேண்டுமென்பதற்காக காத்திருக்கின்றார்.

அவ்வாறான தருணம் ஏற்படுகின்ற போது, தவிர்க்க முடியாத காரணத்தால் அமெரிக்காவால் ஏற்கனவே முன்மொழி யப்பட்டு பொதுமக்களின் எதிர்ப்புக் களால் கைவிடப்பட்ட எம்.சி.சி. உடன் படிக்கையை கைச்சாத் திட முடியும் என்று திட்டமொன்றை வகுத்துள்ளார்.

அவ்வாறு எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்திடப் படுமாக இருந்தால், அமெரிக்க- இந்தோ அல்லது இந்தோ-பசுபிக் மூலோபயத்தில் இலங்கையை அமெ ரிக்கா மற்றும் மேற்குலகம் தமது தேவைகளுக்கு பயன் படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

அவ்விதமான நிலைமைகள் ஏற்படுவ தானது அமெ ரிக்காவுக்கு மகிழ்ச்சி அளிக்கும் விடயமாகும். அமெ ரிக்கா அவ்வாறான மகிழ்ச்சியை அடையுமாக இருந் தால், அமைச்சர் பஸில் ராஜபக்ஷமீது காணப்படும் தனிப்பட்ட வருமான மீட்டல், கறுப்பு பணச்சந்தை, பணத் தூய்தாக்கல் உள்ளிட்ட குற்றசாட்டுக்கள் தொடர்பில் அமெரிக்கா நடவடிக்கைகளை முன்னெடுக் காது கிடப்பில் போட்டு விடும். அவ்விதமான செயல் பாடானது, அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் ஓய்வு காலத்தை இனிமையாக கொண்டு செல்வதற்கே வழி சமைக்கும்.

இந்தப் பின்னணியில் இந்த மாததத் தின் 22ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க திணைக்கள அரசியல் விவகாரங்களுக் கான வெளியுறவுத்துறை செயலர் விக் டோரியா நுலாண்ட் இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இவர் ஏற்கனவே நேபாளத்தில் எம்.சி.சிக்கு எதிர்ப்புக் கள் வலுவாக காணப்பட்டபோதும் அந்நாட்டு பாராளு மன்றத்தின் அனுமதியைப் பெற்று நடைமுறையாவதற்கு காரணமாக இருந்திருக்கின்றார்.

அவ்விதமானதொருவரே இலங்கைக்கு வருகின்றார். அவர் நிச்சயமாக நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் கரிசனை செலுத்துவார். அவ்வாறான கரிசனையின் பல னாக, மீண்டும் எம்.சி.சி. உடன்டிக்கை தூசு தட்டப்பட்டு சீர்தூக்கப்படும்.

குறிப்பாக அமெரிக்க பிரஜையாக இருக்கும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வுடனான சந்திப்பின்போது எம்.சி.சி. உடன்டிக்கை சம்பந்தமாக நிச்சயமாக கலந் துரையாடப்படும் - என்றார். (ஐ)

# ஜனாதிபதியை கூட்டமைப்பு சந்தித்துப் பேச்சு நடத்தும்!

## முடிவு மாறாது என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, மார்ச் 14

“ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்சவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் இடையிலான உத்தி யோகபூர்வ சந்திப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை திட்டமிட்ட வாறு நடைபெறும். ரெலோவின் நிலைப்பாடு தொடர்பில் நான் பதிலளிக்க விரும்பவில்லை.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக் கும் இடையிலான சந்திப்பு குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிப் புகள் வெளியாகி இருந்தபோதும், அவை நடைபெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி செயலகத்தால் இந்தச் சந்திப்பு குறித்த அறிவித்தல் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கூட்டமைப் பின் தலைமைக்கு வழங்கப்பட்டது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சு நடத்து வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச இப்போது விடுத்துள்ள அழைப்பை ஏற்பது சர்வதேசப் பொறியிலிருந்து அவரை மீட்கும்



நடவடிக்கையாகி விடும் எனத் தெரிவித்த ரெலோ, அதன் காரண மாக அந்தச் சந்திப்பில்தான் கலந்து கொள்வதில்லை என முடிவு செய் துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பங்காளிக் கட்சியான ரெலோ தனது முடிவைக் கூட்டமைப்பின் தலைமைக்கு எழுத்திலும் அறிவித் துள்ளது.

இது தொடர்பாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநா தன் எம்.பி., மார்ச் 10 ஆம் திகதி யிட்டு அனுப்பிவைத்தார் எனக் கூறப்படும் கடிதம் ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இந்த விடயம் பற்றி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவிய போது,

“ரெலோவின் நிலைப்பாடு தொடர்பில் நான் பதிலளிக்க விரும்பவில்லை. எனினும், ஜனா திபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கும் இடையிலான உத்தி யோகபூர்வ சந்திப்பு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திட்டமிட்டவாறு நடைபெறும்.

ஜனாதிபதி காரியாலயத்தில் பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியுடன் அவர் தரப்பில் யார் கலந்துகொள்வார்கள் என்று எமக்குத் தெரியாது. கூட்டமைப் பின் சார்பில் நானும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப் பினர்களும் கலந்துகொள வோம்.

வடக்கு, கிழக்கின் தற்போதைய நிலைமை மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், புதிய அரசமைப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை இந்தச் சந்திப்பின்போது பேசவுள் ளோம்” - என்றார்.

# சர்வகட்சி மாநாட்டின் பின்னர் 11 கட்சிகளின் முடிவு வெளிவரும்!

## அரச பங்காளி கட்சி தலைவர்

“ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டின் பின்னர் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து உறுதியான தீர்மா னத்தை எடுப்போம்.”, என்று அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஸ்ரீ லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசி ரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சர்வகட்சி மாநாடு குறித்து அவரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. இதற்குத் தீர்வு காணும் நோக்கம் நிதிய மைச்சுக்கு கிடையாது. முறையற்ற பொருளாதார முகா மைத்துவத்தால் நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலை மையில் தற்போது அரசியல் நெருக்கடியும் தீவிரமடைந் துள்ளது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வ தற்காக செயல்படுத்தப்பட வேண்டிய 11 யோசனை களை பங்காளி கட்சிகள் ஒன்றிணைந்து முன்வைத் தோம். யோசனை திட்டங்களை செயல்படுத்துவதை விடுத்து அரசாங்கம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் தலைவர் ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கியது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்தாததால் மக் கள் மத்தியில் பங்காளி கட்சிகள் உண்மைகளை பகிரங்கப் படுத்த வேண்டிய நிலைமை தோற்றம் பெற்றது. அமைச் சரவை கூட்டுப்பொறுப்புக்கு எதிராக அமைச்சர்கள் செயல் பட்டார்கள் என குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டின் பொருளாதாரம் திட்டமிட்ட வகையில் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றது என்பதை பல்வேறு காரணிகள் ஊடாக விளங்கிக்கொள்ள முடிகிறது. தவறு களை திருத்திக்கொள்வதற்கு பல வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் அது குறித்து அரசாங்கம் அவதானம் செலுத் தவில்லை. நாட்டு மக்கள் ஒருவேளை உணவைக்கூட பெற்றுக் கொள்வதற்கு மக்கள் பெரும் அசௌகரியங் களை எதிர்கொண்டுள்ளார்கள். வீதி அபிவிருத்தியை தற்கா லிகமாக நிறுத்தி நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கு மாறு அரசாங்கத்திடம் பலமுறை முன்வைத்த யோசனையை அரசாங்கம் செயல்படுத்தவில்லை.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளி கட்சிகள் ஒன்றிணைந்து இம்மாத இறுதியில் நுகே கொடையில் மாநாட்டை நடத்த தீர்மானித்துள்ளோம். ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி சர்வக்கட்சி தலைவர் மாநாட்டைத் தொடர்ந்து எங்கள் சிறந்த அரசியல் முடிவை அறிவிப்போம் - என்றார். (ஐ)

பயிற்சி ஊடகவியலாளர்கள் தேவை




யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.

- எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள
- துடிப்பும் துணிவும் உள்ள
- செய்தித்துறையில் விருப்புள்ள
- சாதிக்கும் எண்ணம் கொண்ட

இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
075 315 3153
trainingjournalistjaffna@gmail.com







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பவர் பாண்டி,எந்திரன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா - வைத்தியர்-எம்.
மலரவன்-கண் சத்திர சிகிச்சை நிபுணர்



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்



9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு